தென்மொழி

பத்தவச்சலற்கு மணிமண்டபமா?

வண்டமிழை வாழ்த்தி
வலம்வந்த மாணவரை
குண்டுக் குழல்வெடித்துக்
கொன்றகொடுங் கோலன்
பழிமறைய மக்கட்
பணத்தைப்பா ழாக்கல்
அழிவுவழி யாகும் அறி!

இந்திவல் லாண்மை
எதிர்த்துக் குரல்கொடுத்த
செந்தமிழ் வீரச்
சிறுவரையுங் கொன்றொழித்த
பத்தவச்ச லற்கெடுக்கும்
பாழ்மண்ட பத்துள்ளே
கத்துங்காண ஆந்தை களித்து!

அன்னைத் தமிழ்காக்க
ஆர்த்தெழுந்த மாணவர்தம்
இன்னுயிர் மாய்த்த
இழிபெயரைத் தாங்கி
எழுகின்ற மண்டபத்துள்
இன்னாது கத்திக்
கழுதைகள் சென்றடையுங் காண்!

— இறை

உள்ளே...

தமிழறமும் ஆரிய தர்மமும்

ஒரே முடிவு!

ஆங்கிலமும் தொழில் வளர்ச்சியும்!

கலைச் சொல்லாக்கத் தேக்கம்

தமிழீழமும் தமிழ்நாடும்

தென்மொழி அவையக் கருத்தரங்க நிகழ்ச்சி - உரைகள்

கணிப்பொறி இளைஞர்கள் கண்ட கவின் சிறப்பு!

வினா விடை

நூல் நிறை

நமக்கு வந்த மடல்கள்

செய்திகள்

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி - 29
ஓலை - 10

திபி. 2028 துலை - 1997 அத்தோபர்

தமிழியல் அறமும் ஆரியவியல் தர்மமும்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(திருக்குறள் மெய்ப்பொருளுரையிலிருந்து)

திருவள்ளுவர் கூறும் பொதுமை - பொதுவுணர்வு - பொதுத் தொண்டு எல்லார்க்கும் நல்லது செய்வது. இவ்வுணர்வைத்தான் இவர் அறம் என்று கூறுகிறார். இவர் கூறும் பொதுவுண்ர்வெல்லாம் அறம்; அறமெல்லாம் பொதுவுணர்வு; இவ்வாறு பொதுமைக்கே அறம் என்றும், அறத்திற்கே பொதுமை என்றும் இவர் கூறும் உலகப் பொதுமை மிகவும் வியக்கத்தக்கது. வேறு யாரும் கூறாதது. இவர் கூறும் அறவுணர்வுகளை யெல்லாம் ஒருசேரப் பார்க்கின் இவ்வுண்மை தெற்றெனப் புலப்படும். இதுவே தமிழியல் என்று நாம் தெளிய வேண்டும். மற்றபடி ஆரியவியல் கூறும் வருணக் கொள்கையையும், சாதியக் கொள்கையையும் அவற்றுக்குத் தகுந்த வாழ்வியல் கோட்பாடுகளையும் நடைமுறை களையும் இவர் 'அறம்' என்று ஒப்புவதில்லை. ஆரியவியலின்படி அறம் என்பது 'தர்மம்'. 'தர்மம்' என்பது 'குலவொழுக்கம்' அல்லது 'மதவொழுக்கம்' அல்லது 'மதக்கடமை' அல்லது 'ஆரியப் பார்ப்பன நன்மை நெறிகள்'.

"மனுவால் எந்த வருணத்தார்க்கு என்ன 'தர்மம்' விதிக்கப்பட்டதோ அதுவே வேத சம்மதமாகும்" - மனுதர்மம் 27.

"சூத்திரர்களின் தர்மம் என்னவென்றால் பிராமணர்களுக்குப் பணிவிடை செய்வதும், அவர்களுக்கு அடிமையாய் இருப்பதுமே" - மனுதர்மம் 1:31.

இவைபோலும் குலவொழுக்கக் கோட்பாடுகளே ஆரியதர்மக் கோட்பாடுகளாகும். பொதுவாகக் கூறுமிடத்து ஆரியதர்மம் என்பது அவர்களுடைய நன்மையும் வாழ்வும் நோக்கியே வகுக்கப் பெற்றுள்ளது. தமிழியல் அறம் என்பது உலக மாந்தர்க்கே பொதுவானது.

"சூத்திரன் பிராமணனுடைய தொழிலைச் செய்தாலும் சூத்திரனே யாவான். பிராமணன் சூத்திரனுடைய தொழிலைச் செய்தாலும் பிராமணனேயாவான்"

"சூத்திரன் எவ்வளவு திறமை உடையவனாக இருந்தாலும் கண்டிப்பாய் அவனைப் பொருள் சேர்க்க விடக் கூடாது. சூத்திரனைப் பொருள் சேர்க்கவிட்டால், அது பிராமணனுக்கு ஆபத்தாக முடியும்" - மனு 10-129.

"பிராமணன் உண்டு மிகுந்த எச்சில் ஆகாரமும், உடுத்திக் கிழிந்த கந்தல் ஆடையும், கெட்டுப் போன தானியமுமே சூத்திரனுடைய வாழ்க்கைக்குக் கொடுக்கப்பட வேண்டும்". - மனு 10-125.

"பிராமணர் இழிதொழில்களில் ஈடுபட்டிருந்தாலும் பூஜிக்கத் தக்கவர்கள்" - மனு 9-313.

(தொடர்ச்சி 20-ஆம் பக்கம் பார்க்க)

ஒரே முடிவு!

என்றென்றைக்கும் மாடியில் இருப்பவன்
இறங்கிக் கீழே வரமாட்டான்! - அவனை
அன்றன்றைக்கும் எதிர்பார்த் திருப்பவன்
அவனிடம் ஏறிச் செல மாட்டான்!
இதற்கொரு முடிவைச் செய வேண்டும் - அவர்
இருவரும் ஒன்றாய் உய வேண்டும்!

உண்ணக் கிடைத்தவன் ஒரு வேளைக்கும்
உண்ணும் உணவைத் தரமாட்டான்! - வெறும்
மண்ணில் கிடப்பவன் மானத்தை விட்டே
மற்றவன் தருவதைப் பெறமாட்டான்!
இதற்கொரு முடிவைச் செய வேண்டும்! - அவர்
இருவரும் ஒன்றாய் உய வேண்டும்!

பட்டுடை உடுப்பவன் பஞ்சின் உடைகளைப்
பட்டினி கிடப்பினும் தொட மாட்டான் - முழுக்
கட்டுடை இன்றியே கந்தைகள் உடுப்பவன்
கற்பனை செய்வதை விட மாட்டான்!
இதற்கொரு முடிவைச் செய வேண்டும்! - அவர்
இருவரும் ஒன்றாய் உய வேண்டும்!

சமவுடை மைப்பொது நிலைக்குமு காயம்
சரியென உணர்ந்துடன் நிறுவிடுவோம் - அதில்
சாதிகள் மதங்களைத் தவிர்த்திடு வோம்! சரி
சமமென அனைவரும் துய்த்திடுவோம்!
இதற்கொரு முடிவைச் செய வேண்டும்! - இங்
கெவருமே ஒன்றென உய வேண்டும்!

-- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(26.5.81 - மனுநூல் எரிப்புப் போராட்டத்தில் தளைப்படுத்தப்பட்டுக் கோவைச் சிறையில் இருக்கையில் எழுதியது)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்; அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(திருவளம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நம்முழக்க, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை சாதிப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. சாதிப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையிலிருந்தும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் முன்னேறாது; தமிழ்நாடு தன்னுரிமை அடையவும் முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், சாதிப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழக்க, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சுவடி.29) தி.பி. 202அ - துலை (அத்தோபர் - '97) (ஓலை.10

ஆங்கிலமும் தொழில்வளர்ச்சியும்

தமிழ்நாட்டில் ஆங்கிலத்தின் வல்லாண்மை மேன்மேலும் வலுப்பெற்றுத் தமிழ் நலிவுறும் வகையிலேயே தி. மு. கழக அரசின் செயற்பாடுகள் தொடர்கின்றன. 'இன்னும் ஓரிரு தலைமுறைக் காலத்துக்குள் தமிழ் வழக்கொழிந்துவிடும்; எதிர்காலத்தில் எல்லா மட்டத்திலும் தமிழறியாதவர்களே ஆளுமை செலுத்தும் நிலைக்கு இன்று அடிகோலப் படுகிறது; பெரும்பான்மைத் தமிழ்மக்கள் நாளடைவில் பின்தங்கி, அடிமை நிலையில் காலங் கழிக்க நேரும்; இவற்றுக்கெல்லாம் வழிவகுக்கும் ஆங்கில வாயில் மழலையர் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் ஆகியவற்றைத் தடைசெய்ய வேண்டும்; ஆறாம் வகுப்பளவில் அயன்மொழிகளை மொழியளவில் பயிற்றுவிக்கப்படலாம்' என்று தமிழுணர்வாளர்கள் பல்லாண்டுக் காலமாகத் தொடர்ந்து குரல்கொடுத்து வந்ததன் விளைவாக அப்பள்ளிகளுக்கு ஏற்பிசைவு (அங்கீகாரம்) அளிக்காது நிறுத்தி வைத்திருந்த அரசு, அற்றம் பார்த்து அதனை மீண்டும் வழங்க முற்பட்டுள்ளது.

தமிழ் ஆட்சிமொழி பண்பாட்டுத் துறை வகுத்துத் தனி அமைச்சகங் கண்டாலும், முனைப்புறச் செயற்படாதவாறு அத்துறை அமைச்சர்க்கு

அவ்வப்போது குட்டுவைப்பதன் மூலம், 'அவர் சொல்வதை அதிகாரிகள், அலுவலர்கள் பொருட்படுத்தத் தேவையில்லை; மற்றை அமைச்சர்களும் பிறரும் ஒத்துழைக்க வேண்டுமென்பதில்லை; தமிழில் கையொப்பமிடுவது, வணிக நிலையங்கள், தொழிற்கூடங்கள் முதலியவை தமிழில் பெயர்ப் பலகை வைப்பது போன்றவற்றைச் செய்தாக வேண்டுமென்பதில்லை' என்றெல்லாம் குறிப்புக் காட்டப் படுகிறது.

தமிழ்வாயில் பொறியியற் கல்வியை ஒருவாறு தட்டிக்கழித்த அரசு, அதில் ஆர்வங்கொண்ட மாணவர்களை ஆங்கில வழியிலேயே திசைதிருப்பி விட்டிருக்கிறது.

அண்மையில் தனி வழக்குமன்றம் ஒன்றில், குற்றஞ் சாட்டப்பட்டவர் ஒருவர் தம் மீதான குற்றச் சாட்டுகளைத் தமிழில் தரும்படியாக வேண்டியுங்கூட அவ்வழக்கு மன்ற நடுவர் தர மறுத்திருக்கிறார். 'எங்குந் தமிழ்; எதிலுந் தமிழ்' என்று நீட்டி முழக்கிவருவதோடு, சட்டப்படி தமிழ் அறமன்ற மொழியாகச் செயற்படுவதாகக் கூறப்படும் தமிழ்நாட்டில் நடுவர் ஒருவர் 'குற்றச்சாட்டுகளைத் தமிழில் தரத் தேவையில்லை' என்கிறார் என்றால், அதற்கு மேற்கண்டவாறுள்ள அரசின் போக்கே கரணியம். குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிந்த மொழியிற்றான் குற்றச்சாட்டு விளக்கங்களைத் தரவேண்டும் என்று சட்டம் இல்லையாம். அப்படி யானால் அறியாத மொழியிற்றான் தர வேண்டும் என்று சட்டம் இருக்கிறது போலும்!

இந்திய ஒருமைப்பாட்டைக் காக்க வரிந்துகட்டிக்கொண்டு நிற்கும் நடுவணரசுத் தொழிற்றுறை அமைச்சர் முரசொலி மாறன், கடந்த இரு மாதங்கட்கு முன், தில்லியில் நடந்த ஆங்கில எதிர்ப்பு நிகழ்ச்சியொன்றை உடனடியாகச் சென்னைக்கு வந்து கண்டித்து பேசியபோது நாம் ஆங்கிலத்தைக் கைவிட்டுவிட்டால் காட்டு விலங்காண்டிகள் காலத்துக்குப் போய்விட நேரும் என்று எச்சரித்திருப்பதோடு தமிழ்நாட்டுத் தமிழ் ஆட்சிமொழி பண்பாட்டுத்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகனைச் சுட்டி, எங்குந்தமிழ் எதிலுந்தமிழ் என்பதும் வேண்டும்; ஆங்கிலமும் வேண்டும் என்றும் அறிவுறுத்தியிருக்கிறார்.

'பிரான்சு நாட்டில், அதன் தலைநகரான பாரீசு மாநகரிலேகூட ஒரு சிறுவனை ஆங்கிலம் பயிற்றுவிக்க அங்குப் பள்ளி இல்லை. அங்கிருப்பவர்களெல்லாம் காட்டு விலங்காண்டிக் காலத்துக்குப் போய்விட்டவர்களா? சப்பான், செருமன் முதலான நாட்டவர் களெல்லாம் காட்டு விலங்காண்டிகளா?' என்று அவரைக் கேட்பார் இல்லை!

அது ஒருபுறமிருக்க, தமிழ்க்குடிமகன் எப்போது ஆங்கிலம் வேண்டாம்

என்று சொன்னார்? அவர்தம் செயற்பாடு என்ன என்பது முரசொலி மாறனுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. தமிழ் நாட்டில் தி.மு. கழக அரசின் கொள்கைக்கு மாறாக அமைச்சர் தமிழ்க்குடிமகன் செயல்படுகிறார் என்று கொள்ளலாமா? தமிழ் ஆட்சித் துறை அமைச்சர் பெயரளவில் இருக்கவேண்டுமே தவிரச் செயல்படக் கூடாது என்பதுதான் தி. மு. கழகக் கொள்கையா? முரசொலி மாறன் பொது மேடையில் வைத்து என்ன உணர்த்துகிறார் என்பது தமிழ்க்குடிமகனுக்குக் கட்டாயம் விளங்கியிருக்கும். அப்படியிருந்தும் தமிழ்க்குடிமகன் இன்றுவரை அதுபற்றி வாய் திறக்கவில்லையே ஏன்?

ஆங்கிலத்தின் தேவையை உணர்த்து முகத்தான் முரசொலி மாறன் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார். கேரளம், மேற்கு வங்கம் முதலான மாநிலங்களின் முதல்வர்கள் தங்கள் மாநிலங்களில் ஆங்கிலம் படித்தவர்கள் எண்ணிக்கை மிகுதி என்பதைக் காட்டித் தத்தம் மாநிலங்களில் முதலீடு செய்து தொழில் தொடங்குமாறு வெளிநாட்டவர்களை வேண்டுகிறார்களாம். தமிழ்நாட்டில் ஆங்கிலம் இல்லை யென்றால் வெளிநாட்டவர்கள் வந்து தொழில் தொடங்கமாட்டார்களாம். இங்கே தொழில்வளம் பெருகாதாம்.

பிறநாட்டு முதலீடுகளால் தொழில் வளம் பெருகப் பிறநாட்டு மொழியைப் பயில வேண்டும் என்றால், அது ஆங்கிலத்தோடு நிற்குமா? இன்னும் அயல் மொழிகளுக்கும் தாவாது என்பதற்கு என்ன உறுதி? அயல்நாட்டு முதலீடு முதலீடாக மட்டுமா வருகிறது? அது மொழித் திணிப்பாகவும், உழைப்புச் சுரண்டலாகவும், வணிக நிலையில் கட்டாய உடன்படிக்கை யாகவு மன்றோ வருகின்றது! இங்குள்ள தாய்மொழிப் பயிற்சியை நலிவுறுத்தி, இயற்கையான அறிவு வளர்ச்சியைக் கெடுத்து, உள்நாட்டுத் தொழில்களின் ஆணிவேரை அறுத்துப் படிப்படியாக அடிமைகொள்ளவரும் பிறநாட்டு முதலீடுகளும், தொழில் ஒப்பந்தங்களும் இன்று பளபளப்பாக இருக்கக்கூடும். ஆனால் இவை எதிர்காலத்தில் எத்தகைய நிலையை உருவாக்கும்?

அயல்நாட்டு முதலீடுகளால் தமிழ்நாடு வளர்ச்சி பெற்றுவிடாது. ஒரு வீக்கநிலை ஏற்படக்கூடும். அஃது உண்மையில் வளமோ வளர்ச்சி யோ ஆகாது. மாறாக, அது நோய் வீக்கமாகவே அமையும். இதனால் வளம்பெறுவோர் அயல்நாட்டு முதலீட்டாளர்களே என்பது உறுதி. தமிழன் தன்னளவில் மேம்படுவதே உண்மையான வளர்ச்சியாக முடியும். ஆகவே தமிழ்நாட்டில் அயல்நாட்டு வல்லாண்மையையும் அதற்குத் துணைநிற்கும் ஆங்கில வல்லாண்மையையும் எதிர்ப்பது தமிழ்நல உணர்வினர் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்!

- இறை

கலைச்சொல்லாக்கத் தேக்கம்

மா. பூங்குன்றன்

அறிவியல் வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் தமிழில் கலைச் சொற்கள் பெருவதற்கும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கும் ஒரு பெருந்தேக்கம் ஏற்பட்டுள்ளது. அதற்கு முதற்கரணியம் கலைச்சொற்களின் தேவையை முழுமையாக உணராதது ஆகும். அதனால் நடைமுறைப் படுத்தத் தயங்குவதும் புறக்கணிப்பதும் எள்ளுவதும், அதற்கு மாறாக பிறமொழிக் கலைச் சொற்களைத் தயங்காமல் கையாளுவதுமான செயல்கள் நடைபெறுகின்றன.

மொழி என்பது இனத்தின் அறிவு வளர்ச்சியையும், வரலாற்றையும், பண்பாட்டையும் பொதிந்து வைத்துள்ள பெட்டகமாகும். முன்னோரின் அறிவும் உழைப்பும் மொழியில் செலவிடப்பட்டுள்ளன. ஒரு குடும்பத்தில் முன்னோரின் சொத்துப் போன்று ஓர் இனத்தில் முன்னோரின் சொத்து மொழி. மொழியைப் பேணாது விடுவோமானால் அச்சொத்துகளைக் கையிழந்துபோகும் நிலைதான் ஏற்படும். இனத்தின் தனித் தன்மையைக் காப்பாற்றும் ஒரு கூறாகத்தான் மொழி நிலவுகிறது. தேசிய நலம் பேசும் அரசியலார் முதல் மூளை ஆய்வு செய்கிற அறிவியல் அறிஞர்கள் வரை இன்றைக்கு மொழிக்கு முதன்மை கொடுக்கும் காலம் வந்து விட்டது.

மொழியின் கருத்துப் பொதிவுகள் அமைந்த பகுதியே கலைச் சொற்கள்தாம். ஒரு நீண்ட நெடிய கருத்தினைக்கூட ஒரே சொல்லாக இருந்து தாங்கி இயங்கும் திண்ம வடிவம்தான் கலைச்சொல். ஒரு கலைச் சொல்லைத் தொலைத்துவிட்டோமானால் அது தொடர்பான மொழியின் ஓர் உறுப்பையே தொலைத்தோம். ஒரு கலைச்சொல்லை உருவாக்கினோமானால் அது தொடர்பான ஒரு புதிய கருவியையே மொழிக்கு உருவாக்கினோம் என்றுதான் பொருள்.

யானை என்ற ஒரு விலங்கிற்கு முப்பத்தாறு பெயர்கள் நிலவுகின்றன என்றால் முப்பத்தாறும் முப்பத்தாறு பண்பு இயல்புகளை மொழியில் பதிவு செய்துள்ளது. ஒரு பூவின் ஒவ்வொரு வளர்ச்சி மாற்றத்திற்கும் பெயருண்டு எனில் அதை இம்மொழியினர் நுட்பமாக கண்டறிந்தனர் என்றேபொருள். ஒரு கப்பல் தொடர்பான இவ்வளவு சொற்கள் இருக்கின்றன என்றால் அத்தனைப் பொருள்களையும் உருவாக்கியுள்ளனர் - பயன்படுத்தியுள்ளனர் என்று பொருள்.

கடன்பெற்றதால் வந்த இழிவு

ஒரு கிழமையில் ஏழு நாட்களில் இரண்டு நாட்களின் பெயர்கள் வடமொழியாக இருக்கிறது என்பதால் அவ்விரு கோள்களைப் பற்றித்

தமிழர்களுக்குத் தெரியாது என்ற முடிவை வெளிநாட்டறிஞர் கால்டுவெல் எடுத்தார். கடன் வாங்கிய கலைச்சொற்களால் இனத்திற்கு இழிவு வந்தது. ஆனால் இன்றைக்கோ பல அரிய கலைச் சொற்கள் மறைந்து - மறந்து - புறக்கணிக்கப்பட்டு அவற்றிற்குப் பகரமாக ஆங்கில, வடமொழிச் சொற்கள் தாராளமாகப் பெய்யப்படுகின்றன.

கடன் கொடுத்ததால் தவிர்ந்த சிறப்பு

தொழிலகங்களில் உருவாக்கிய பொருள்களைக் கிடத்திவைக்கும் 'கிடங்கு' என்ற தமிழ்ச்சொல் மலாய் மொழியில் 'குடாங்' என்று வழங்க, Godown என்ற ஆங்கிலச் சொல்லுக்கு அதுவே மூலம் என்று ஆங்கில அகராதிகளில் குறிக்கப்பட்டது. இது போல் இன்றைக்குத் தமிழ்ச்சொற்கள் பிறமொழிகளில் மூலந்தெரியாமல் கலந்துள்ளன.

தமிழகத்தின்று தப்பிய அனக்கொண்டா

அனக்கொண்டா என்பது தென் ஆப்பிரிக்க, தென் அமெரிக்கா நாடுகளில் வாழும் ஒரு வகைப் பாம்பு . யானையைக்கூட விழுங்கிக் கொள்ளக் கூடியது. அச்சொல்லுக்கு மூலம் தேடி 'ஆனைகொண்டான்' என்ற தமிழச்சொல்லாக இருக்கலாம் என்று ஆங்கிலேயர் முடிவெடுத் தனர். இது தமிழ்ப் பெயராகவும் இருக்கிறது. இப்போதைய தமிழ் நாட்டில் வாழ்ந்திருப்பதற்கும் வாய்ப்பில்லை. ஒரோவழிக் குமரிக்கண்ட இருப்பினில் இது எளிதாக வாய்த்திருக்கலாம். கடல்கொண்ட கண்டத்தில் அனக்கொண்டாவுடன் இச்சொல்லும் போயிருக்க வேண்டும். அப்படியானால் இச்சொல் குமரிக்கண்டத்தின் சான்றாக நின்றது. கலைச்சொற்கள் வரலாற்றையும் செய்திகளையும் தாங்கி நிற்கும் செயற்பாடுடையது என்ற முகாமை இதில் தெரிகிறது.

மேலும் பிறமொழிகளிலிருந்து கலைச்சொற்களை நேரடியாகப் பயன்படுத்துவதால் மொழியும் வளராது. அது பற்றிய அறிவும் வளராது. என்றென்றும் கடனாளியாகவே இருப்போம். அம்மொழியைப் புரிந்தவர்கள் மட்டும் மந்திரம் போல் மறைத்து வைத்து ஆதிக்கம் செலுத்த நேரும். அறிவியல் மறையோ மந்திரமோ அல்ல.

பல தேசிய மொழிகளைக் கொண்ட கூட்டமைப்பு நாடான இந்தியாவில் இந்தி மொழியின் வல்லாளுமையை எதிர்த்து, தமிழ்நாட்டில் உயிர் ஈகம் முதல் பல வகையான போராட்டங்கள் நடைபெற்றன. இந்தியைப் பயிற்று மொழியாக்குவதன் வழி இரண்டாந்தர மக்கள் ஆவோம் என்று பல அறிஞர்கள் ஆராய்ந்து கூறினர். இருப்பினும் அரசியல் சூழ்ச்சிகளாலும் ஆரியர் சூழ்ச்சிகளாலும் இந்தி, ஆங்கிலம் இவற்றிற்கான மூடப் பற்றை (மோகத்தைத் திட்ட மிட்டு வளர்த்தெடுக்க முடிந்தது. இன்றைக்குப் படித்த-படிக்காத, சிற்றூர்-பேரூர், உயர்க்குடும்ப-நடுத்தரக் குடும்பப் பெற்றோர்கள் அனைவரும் தம் பிள் ளைகள் தமிழில் பயின்றால் பாதுகாப்பில்லை - பயனில்லை -

வேலைவாய்ப்பில்லை என்பதோடு மதிப்புக்குறைவாக எண்ணி, காளான்கள் போல் ஆங்காங்கு வளர்ந்துநின்று, கல்வியின் வழி வணிகம் நடத்தும் மழலையர் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் சேர்த்து தமிழ்ப் படிக்காமலேயே கல்வி முடித்து வரும் திட்டத்திற்கு ஆட்பட்டு விடுகின் றன.

தமிழைக்காட்டி ஓட்போலை பெற்று, தமிழால் அமைந்த திரவிட அரசுகளும் தமிழ்ப் பயிற்றுமொழிக்கு முனைப்பெடுக்க வில்லை. தமிழில் துறை நூல் உருவாக வழி செய்ய வில்லை. தமிழில் படித்தோர்க்கு வேலைவாய்ப்பை உருவாக்க முன்வரவில்லை. வேலைவாய்ப்பை நோக்கித்தான் இன்றையக் கல்வியே அமைந்திருப்பதால் தமிழுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்தாமல் தமிழை மேடைக்கும் இலக்கியத்திற்கும் மட்டுமாக முடக்கி விட்டனர். விளம்பரப் பலகை தமிழில் வர வேண்டும் என்ற முயற்சியை, அரசின் ஆற்றலை ஒப்பிட அச்சிறு பணியைப் பெரியதாகக் கொண்டு 'காலக்கெடு - வணிகர்களுடன் பேச்சுச்சுற்று' என்ற செயற் சடங்குகளை நடத்தி நீடித்து வருகின்றனர்.

இந்த ஒட்டு மொத்த மொழிக்கு ஆக்கந்தராத நிலையில் பல ஆண்டுகளின் முடிவில் இன்றைக்குத் தமிழ்ப் படிக்கக் கூடத் தெரியாத - தமிழ்ப் பயிலாத தமிழ்மக்களும், பிற மாநில மக்களுமாக இன்றைக்குத் தமிழகத்தில் நிறைந்து விட்டனர். இன்றைக்கு ஓரளவு வளமான குடும்பங்கள் முதல் மேல் தட்டு மக்கள் வரை அனைவரும் தமிழைப் புறக்கணித்த மக்களாகவே உள்ளனர். இதுதான் இன்றைய தமிழகத்தின் நிலை.

ஒரு காலக்கட்டத்தில் அறிஞர்கள் முதல் அரசியலாளர் வரை தமிழில் ஒவ்வொரு துறையும் வளரவேண்டும் என்று ஒருங்கிணைந்து பாடுபட்டனர். தமிழ்ப் பார்ப்பனர்களும் இதில் முன்னோடியாக இருந் திருக்கின்றனர். 1937 இலேயே அறிவியல் கலைச்சொல் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. கலைக்களஞ்சியத் தொகுதிகளின் பின்னிணைப் பாக, நீண்ட கலைச்சொல் அகரவரிசைப் பட்டியல் ஒன்று வெளி யிடப்பட்டுள்ளது. அதன் பிறகு சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், நியூ செஞ்சுரி புத்தக நிலையம் போன்ற நூற்பதிப்பகங்களும் புது அறிவியல் நூல்களைப் பதிப்பித்துத் துணைபுரிந்தன. முப்பத்தைந்து ஆண்டுகளாக அறிவியலிலும் பிறதுறைகளிலும் புதிய பல கலைச்சொற்களை உருவாக்கி பிறமொழி கலவாது எழுதி வெளியிட்டு வரும் தென்மொழி இதழும், அறிவியல் இதழாகவே தமிழில் வெளிவந்த 'கலைக்கதிர்' இதழும் இன்னும். பிற இதழ்களும் தமிழில் அரிய பணியாற்றின.

தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் அறிவியல், வாழ்வியல் களஞ்சி யங்கள் பல்லாயிரக் கணக்கான கலைச்சொற்களைப் பயன்படுத்தி வெளிவந்துகொண்டிருக்கின்றன. தூய தமிழ் அகரமுதலிகள்துறை, கலைச்

சொல்லுக்கெனவே அகராதி ஒன்றை உருவாக்கி வருகிறது. இவ்வாறு உருவாக்குவது ஒரு பிரிவு எனில் இதை நடைமுறைப் படுத்துவது இன்னொரு பிரிவு; பொதுமக்கள், அந்தந்தத் துறை வல்லுநர்கள், மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் ஆகியோர் இப்பிரிவினர்.

சில நேரங்களில் மக்கள் தொடர்புத் துறைகளுக்குக் கலைச் சொல்லாக்கங்கள் எட்டுவதே இல்லை. ஆங்காங்குத் துறைகளில் இருக்கும் அலுவலர்கள் தங்களின் தனிப்பட்ட ஆர்வ மேலீட்டால் முனைந்து கலைச்சொல்லாக்கம் செய்கின்றனர். இவர்களுக்கு ஓர் ஒருங்கிணைப்புத் துணையில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு வைப்பகத்தில் ஓய்வூதியம் பெறு வதற்குத் தனியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தின்மேல் 'ஓய்வூ தியர்கள் பணம்பெறுமிடம்' என எழுதப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெறுபவர்கள் 'ஓய்வூதியர்' ஆவரா?

'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்ற தொடரை நோக்கினால் ஓய்வூதியத்தை மதிப்பு கொடுத்துச் சொல்லும் சொல்லாகவே ஓய்வூதியர் தோன்றுகிறது. மருத்துவ அகராதி ஒன்று, நோயாளி என்பதை 'நோயர்' என்று குறிப்பிடுகிறது. அகத்தில் இருப்பவர் அகர் ஆவாரா? ஆனால் நூலகத்தில் இருப்பவர் நூலகர் ஆகிவிட்டார். தமிழ் மரபை அறிந்தவர்கள் மட்டுமே கலைச்சொற்களின் போக்கை அறிந்து செவ்வனே செய்ய இயலும் இவை போன்ற அடிக்கடி பயன்படுத்தும் சொற்களில் ஒரு சீர்மையைக் கையாள ஒருங்கிணைப்பு தேவை.

கலைச்சொல் ஒரு கருத்தை முழுவதுமாக அடக்கிவிட முடியாது. கலைச்சொல் கருத்தின் ஒரு கூறையே விளக்கும். அதே நேரத்து வேறு கருத்தைத் தொட்டு விடவும் கூடாது. அதனால் பொருள் மயக்கம் நேரும். அந்த அளவில் கூர்மை வேண்டும். அரசால் அமைக்கப்பெற்ற தமிழ் வளர்ச்சித்துறை அனைத்துத் துறைகளுக்கும், தனியார் மற்றும் நடுவணரசு துறைகளுக்கும் கருத்து அளிக்கவுமான ஒரு நடுவமாக அமையவேண்டும். கலைச்சொல் உருவாக்கவும் தேவைக்குக் கூறவுமான வைப்பகமாகச் செயல்பட வேண்டும். வல்லுநர் ஆராயும் தொடர்பு நடுவமாக நிறுவப்பட வேண்டும்.

இன்றைய அறிவியற் கருவிகள் வளர்ச்சிகேற்ப அனைத்துத் துறைகளும் மிகவும் விரைவாக வளர்ந்துவருவதால் அவற்றை மொழிக்குள் அடக்கிக் கொணர ஏராளமான கலைச்சொல்லாக்கங்கள் செய்யத் தேவையாக உள்ளது. அந்த அளவில் துறையில் அறிஞர்கள் தாய் மொழியைப் பின்பற்றி துறையை வளர்க்கவில்லை. தாய்மொழி உருவாக்க வேண்டிய சுமை மிகுதியாகிக் கொண்டு வருகிறது.

தமிழைப் பொறுத்தவரை நடைமுறை அறிவியலுக்கு மிகவும் அப்பால் தள்ளியிருக்கிறோம். இந்தி இன்றைக்குப் பெற்றிருக்கும் வளர்ச்சியை நோக்கத் தமிழ் மிகவும் பின்தங்கியுள்ளது. ஆனால், தமிழில்

படிப்பவர்கள் எண்ணிக்கை 'இந்தி'யர்களைக் காட்டிலும் மிகுதி. இத்தனைக்கும் நடுவண் அரசோ தமிழ் நாட்டு அரசோ தமிழர்களுக்காக முயற்சி எடுக்கவேயில்லை. அதே நேரத்தில் 'இந்தி'யர்களுக்கு ஏராளமாக கோடிக்கோடியாக ஒதுக்கப்படுகிறது என்பது வெளிப்படையாள கரவுவேலை. எனினும், இன்றைக்கு மென்கம்மிய (Software) உலகில் தலை சிறந்து நிற்பவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களே என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

கிடைத்த வாய்ப்புகளுக்குள்ளேயே தமிழில் துறைகள் வளர்வதற்கு அறிஞர்கள் பற்பல ஏடல்களை உருவாக்கக் கருத்தறிவித்துள்ளனர். புதுப்புது நெறிமுறைகளை வகுத்துள்ளனர். வளரும் அறிவியல் காலத் திற்கிணையாக தமிழின் தகுதியை அமைத்துவிடப் பாடுபட்டு வருகின் றனர். ஆனால் அவ்அறிஞர்களுக்கிடையே கருத்து மோதல்கள் உருவானது அல்லது திட்டமிட்டு உருவாக்கப் பட்டதுதான் மிச்சம்.

கலைச்சொல் உருவாக்கத்தில் ஈழத்தமிழ் மக்களின் பணி மிகவும் போற்றத்தக்கது. மருத்துவம் பொறியியல் துறைகளில் வளரும் அறிவியலுக்கு இணையால் நூல்கள் உருவாக்கிவந்தனர். அங்கும் சிக்கல்கள் தோன்றிய பின் இப்போது தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் திட்டமிட்டுச் செய்தது போல் அனைத்திடத்தும் வளர்ச்சி சூம்பிப் போய் விட்டுள்ளது.

கலைச்சொற்கள் உருவாகி முடிவதற்குள் அக்கருத்துகள் அல்லது அப்பொருள் வழக்கிழந்து விடுவதால் உருவானவை பயனற்றுப் போய் விடுகின்றன.

T. 5850

பொருள் அல்லது கருத்துகள் பொதுமக்களிடம் அறிமுகமாகும்போதே தகுந்த தமிழ்ப்பெயர்களில் அறிமுகமாக வேண்டும். எடுத்துக்காட்டாக, Computer என்ற சொல்லைத் தெரிந்தவர்களின் தொண்ணூறு விழுக்காட்டினர்க்குக் கணினி, கணிப்பொறி என்ற சொல்லும் புரியும். ஆனால் பேருந்து, தொடர்வண்டி, உயிர்வளி (oxygen) இவை அறிமுகமான காலத்தில் தமிழ்ச்சொற்கள் இல்லாததால் பிறகு உருவாக்கிப் புகுத்தவேண்டிய தொல்லை ஏற்பட்டது.

ஒரு சொல்லுக்குப் பல்வேறு கோணத்திலிருந்து உருவாகும் வாய்ப்பு இருந்தாலும் அதைக் கையாளச் சிறந்த எளிதானதொரு கலைச்சொல் தான் நிற்கும். Bicycle என்ற கருவிக்கு இருசக்கரவண்டி, மிதிவண்டி என பல அடிப்படையில் சொற்கள் தோன்றிலும் மிதிவண்டிதான் நின்றது. இதில் உருவாக்கியவர் தனக்குத் தோன்றியதை மட்டும் பெரிதாகக் காணாமல் நடுநிலையாக நின்று தரப்படுத்த வேண்டும். தரப்படுத்தியதைக் அனைவரும் கையாளத் தயங்கக் கூடாது.

கலைச்சொல் உருவாக்கத்தில் மொழியறிஞர்களும் ஈடுபடுகின்றனர். துறைத் தொழில் நுட்ப வல்லுநர்களும் ஈடுபடுகின்றனர். தமிழில் சொற்கள் உருவாக்க தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு என்ன தகுதியுள்ளது என மொழியியல் அறிஞர்களும், துறைத் தொழில் நுட்பதைப் பற்றி சொற்களை உருவாக்கத் தமிழியல் அறிஞர்களுக்கு எவ்வாறு இயலும் எனத் தொழில்நுட்ப வல்லுநர்களும் எள்ளல் செய்து இறுதியில் இருவரும் ஈடுபடாமல் விட்டு விடுகின்றனர். அல்லது தவறான விளைவுகளாக வெளிவருகின்றன.

கலைச் சொற்களின் சரியான பொருளைக் கூர்மையாக விளக்குவதற்கு மொழிமரபு முகாமையானது. அதே நேரத்தில் துறைத் தொழில் நுட்பத்தை அனைத்துக் கோணங்களிலும் சரியாக உள்வாங்கியவர்களே சொல் உருவாக்க முடியும். ஒரு கருத்தினை உள்வாங்கி ஒரு கோணத்தில் சொல் உருவாக்கப்போக இன்னொரு கருத்தின் வேறொரு கோணத்தை மயங்கிப் பொருள் உணர்த்திவிடக் கூடாது. அதன் ஒன்றையொத்த பல்வேறு கோணங்களையும் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் உணர்ந்திருக்க வேண்டும்.

எனவே, தொழில் நுட்ப நுணுக்கத்தைப் புரிந்த தமிழறிஞராயினும் தமிழ் மரபைப் புரிந்த தொழில் நுட்ப வல்லுநர்கள் பாராயினும் இதைச் செய்யத் தகுதியுடையவர்களே.

இவற்றையெல்லாம் கடந்து கலைச்சொற்கள் உருவாக்கினாலும் அவை பெரும்பெரும் நூல் வடிவிலேயே இருக்கும். அல்லது பரவலாக அனைவர்க்கும் கிடைக்காத நிலையிலேயே இருக்கும். இன்று செய்ய வேண்டுவன பெரிய அளவில் இருக்கின்றன. செய்தவை ஒரு பகுதியாகவே உள்ளன. அவையும், அனைவர்க்கும் கிடைக்காத நிலையில் கலைச் சொல் உருவாவதற்கான நெறிமுறைகளை எளிமையாக உருவாக்கி அனைவரும் அறியச் செய்வது ஒன்றே எளிதானவழி. அந்நெறி முறைகளைக் கொண்டு ஆங்காங்குக் கலைச்சொற்களைச் செய்து கொள்ள முயல்வர். இன்றைய அறிஞர்கள் செய்ய வேண்டிய செயலும் அதுவே. அறிஞர்கள் தாமே கலைச்சொல் அகராதியை - பெரியதொரு மடலத்தை உருவாக்கப் புகுவதால் அது காலம் நிரம்ப எடுத்துக் கொள்கிறது. அச்சீட்டிற்கு அரசு உதவி மற்றும் பிற உதவிகளும் குறைவு. வெளிவந்தாலும் பரவுதலும் அரிது. கலைச்சொல் உருவாக்கும் அனைத்து மக்களும் பார்த்து விட வாய்ப்பு கிட்டாது.

அரசு இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, கணிப்பொறி வல்லுநர்களை வைத்து அனைத்துத் துறையினரும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஒரு நடுவம் நிறுவவேண்டும். இப்போதே காலம் மிகவும் கடந்து விட்டது என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும். ◆

தென் மாவட்டங்களில் சாதி வெறியாட்டம்...
தமிழீழத்தில் மக்கள் படுகொலை...
நாம் செய்ய வேண்டுவது என்ன?

தென்மொழி அவையக் கருத்தரங்கம்

(நிகழ்ச்சிச் சுருக்கம்)

தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் தொடரும் சாதிவெறியாட்டங்கள் குறித்தும் தமிழீழத்தில் தொடரும் மக்கட் படுகொலை குறித்தும் நாம் செய்ய வேண்டுவது என்ன என்பது பற்றித் தென்மொழி அவையம் ஒருநாள் கருத்தரங்கத்தினைக் கடந்த 2028 கன்னி 4 காரி (20.9.1997) அன்று சென்னை - திருவொற்றியூரில் நடத்தியது.

தென்மாவட்டங்களில் சாதிவெறியாட்டம் குறித்து நாம் செய்ய வேண்டுவது என்ன? என்பது குறித்த முதல் அமர்வு முற்பகல் 11 மணிக்குத் தொடங்கியது. சொல்லாய்வு அறிஞர் திரு. அருளியார் தலைமை தாங்கினார். திரு. க. கண்ணன் (உ.த.மு.க.) வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியில் திருவாளர்கள் கதிரவன் (பெருஞ்சித்திரனார் பாசறை), ஆதித்தமிழன் (அம்பேற்கர் சிறுத்தைகள் இயக்கம்), இறை. பொற்கொடி, (திருவள்ளுவர் மழலையர் பள்ளி) நடராசன் (மக்கள் பண்பாட்டுப் பேரவை) மா. பூங்குன்றன் (உ.த.மு.க.) குமரிமைந்தன் (தமிழக மக்கள் பொருளியல் உரிமைக் கழகம்), உஞ்சைராசன் (தலித்துப் பண்பாட்டுப் பேரவை) ஆகியோர் உரையாற்றினர்.

உணவு இடைவேளைக்குப் பின் திருவாளர்கள் தியாகு (தமிழ் தமிழர் இயக்கம்), இரா. திருமாவளவன் (விடுதலைச் சிறுத்தைகள்)

இரா. எழில்மலை (பாட்டாளி மக்கள் கட்சி) ஆகியோர் கருத்துரை வழங்கினர். தலைவர் முடிவுரையில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. தொடர்ந்து பாவலரேறு ஐயா அவர்கள் அயல்நாட்டுத் தமிழர்களுக்கென வழங்கிய நேருரை ஒளிநாடாக் காட்சி 20 நிமைய அளவில் இடம்பெற்றது.

இதன்பிறகு திருக்குறள்மணி இறைக்குருவனார் தலைமையில் தமிழீழத்தில் மக்கள் படுகொலை பற்றிய 2ஆம் அமர்வு தொடங்கியது. திரு. அறிவுடைநம்பி வரவேற்றார். பாவலர் வடிவேலனார், திருவாட்டி தேன்மொழியருளி, திருவாளர்கள் இளங்கோவன் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்) மா.செ. தமிழ்மணி (உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்) பெ. மணியரசன் (தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி) இரா. பாவாணன் (மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்) பேரா. க. சச்சிதானந்தம், கி.வே. பொன்னையன் (தமிழ்நாடு மார்க்கிய இலெனினியக் கட்சி) ஆகியோர் உரையாற்றினர். புலவர் இறைக்குருவனார் தீர்மானங்களை விளக்கிப் பேசினார். அவை ஒருமனமாக நிறைவேற்றப்பட்டன. தொடர்ந்து பாவாலர் இன்குலாபு பேசியபின் தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் நிறைவுரை நிகழ்த்தினார். திரு. சிவபெருமான் (பைந்தமிழ்ப் பாசறை) நன்றி நவின்றார்.

நிகழ்ச்சியில் பங்கேற்றோர்ச் சார்ந்த பல்வேறு அமைப்பினரும் மற்றும் தமிழினத் தொண்டியக்கம் (புதுவை), செந்தமிழ்ச்சோலை, ஆவடித் தமிழ்ப் பேரவை, புரட்சிகர இளைஞர் முன்னணி, தமிழ்வளர்ச்சிப் பேரவை, எண்ணூரர் உருக்காலைத் தொழிலாளர் கழகம், பாவேந்தர் பேரவை, மக்கள் கலை இலக்கியக் கழகம், இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா. இலெ.) முதலான பல்வேறு அமைப்பினருமான ஆர்வலர்கள் நிகழ்ச்சிக்கு வருகைதந்திருந்தனர்.

கருத்தரங்கத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்!

தென்மாவட்டங்களில் சாதிவெறியாட்டம் பற்றியது:

தீர்மானம்: 1

குமுக நயன்மை (சமூக நீதி) பற்றியதாகவும் நலிவுற்றோர் முன்னேற்றத்துக்கான இடைக்கால நலம் பயப்பதாகவும் இருப்பினும், சாதி உணர்வுகள் வலுப்பெறுவதற்கும் ஒருவாறு துணைபுரிவதால் இன்றைய சாதிவழி இட ஒதுக்கீட்டு முறைக்கு மாற்றாகப் பாவலரேறு அவர்கள் வகுத்துள்ள சாதிஒழிப்புத் திட்டம் சரியானதாகுமென்று அரசுக்கும் இயக்கங்களுக்கும் தென்மொழி அவையம் இக்கருத்தரங்கத்தின் வழியாக அத்திட்டத்தை முன்வைக்கிறது.

(விளக்கம்: 'தென்மொழி' - சுவடி:29; ஓலை:8 - பக்கம்:14-16)

தீர்மானம்: 2

சாதிமறுப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுக்கு 'கலப்புத் திருமணத்தினர்' என்கிற பதிவோடு கல்வி, வேலைவாய்ப்பு போன்ற அனைத்துத் துறைகளிலும் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதை அரசுக்கு இக்கருத்தரங்கம் வலியுறுத்துகிறது.

தீர்மானம்: 3

தாழ்த்தப்பட்டோருக்கு என இன்றும் நீடித்துவரும் தனிக்குடியிருப்பு முதலான மாந்தநேயமற்ற ஒதுக்கல்களை முற்றிலும் ஒழித்திடுமாறும் அரசை இக்கருத்தரங்கம் வற்புறுத்துகிறது.

தீர்மானம்: 4

சாதிக் கலவரங்கள் நடக்கும் இடங்களுக்கு நேரில் சென்று கலவர நிலைமைகளை, அறிந்து அவற்றின் காரணங்களைக் களையவும் அதன்வழிச் சாதிக் கலவரங்கள் நிகழ்வதைத் தடுக்கவும், மக்கள் நல அமைப்புகள், இயக்கங்கள் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும் என்று அனைத்து அமைப்புகளுக்கும் தென்மொழி அவையம் அழைப்பு விடுக்கிறது.

தீர்மானம்: 5

சாதிக் கலவரங்களைத் தூண்டும் அரம்பர்களையும் அவர்களுக்குத் துணைநிற்கும் அதிகாரிகளையும் எதிர்க்கிற நோக்கத்தில் அல்லாமல் அவர்கள் சார்ந்த குறிப்பிட்ட சாதி மக்களையே எதிரிகளாகக் கருதும் போக்கைக் கைவிடவேண்டும் எனத் தமிழக மக்களை இக்கருத்தரங்கம் கேட்டுக்கொள்கிறது.

தமிழீழத்தில் மக்கட் படுகொலை பற்றியது:

தீர்மானம்: 1

இலங்கை - சிறீலங்கா அரசும் சிங்களக் காடையர்களும் கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாக அங்குள்ள தமழீழ மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்தும், மறுத்தும் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தியும், அவர்களின் அறவழிப் போராட்டங்களையுங்கூடப் புறக்கணித்தும், அரசியல் அமைப்பு முறைப்படியாகவே தமிழீழக் கோரிக்கையை வைத்துத் தேர்தலில் நின்று பெரும்பான்மையாக வென்றாலும் சட்டமன்ற நடவடிக்கைகளைச் செயலிழக்கச் செய்தும், தொடர்ந்து கொடுமைப்படுத்துவதோடு, முப்படையும், காவல்துறையும், காடையரும் தமிழ்மக்களைப் படுகொலை செய்துவருகின்றனர். எஞ்சிய மக்கள் தங்கள் தாய்நிலத்திலேயே ஏதிலி(அகதி)களாக இடருறுகின்றனர்; உலகின் பல்வேறு நாடுகளில் அடைக்கலம் புகுந்தும் ஏதிலிகளாகவும் அல்லலுறுகின்றனர். அதன்வழித் தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களுங்கூட

இடர்ப்பாட்டுக்கு ஆளாவது கண்கூடு. ஆகவே இவற்றுக்கெல்லாம் ஒட்டுமொத்தத் தீர்வாக, அம்மக்களின் வேண்டுகையான தமிழீழத்திற்கு இந்திய அரசு ஏற்பிசைவு (அங்கீகாரம்) அளிக்கும்படி தமிழ்நாட்டரசு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுமாறும், இந்திய அரசை ஏற்பிசைவு செய்விக்கும் முயற்சியை மேற்கொள்ளுமாறும் தமிழ்நாட்டரசை இக்கருத்தரங்கம் வற்புறுத்துகிறது.

தீர்மானம்: 2

தமிழ்நாட்டிலுள்ள பொதுநல மக்கள் உரிமை அமைப்புகள், தமிழீழத்துக்கு ஏற்பிசைவு அளிக்கும் வகையில் இந்திய அரசையும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி தமிழ்நாட்டரசையும் வலியுறுத்துவதையே இவ்வகையில் தம் முதன்மையான கோரிக்கையாகக் கொள்ளும்படி இக் கருத்தரங்கம் வேண்டுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தென்மாவட்டங்களில் சாதி வெறியாட்டம் பற்றிய கருத்தரங்கில் உரையாற்றியோர் கருத்துச் சுருக்கம் வருமாறு:

1. ஆதித்தமிழன் *(அம்பேற்கர் சிறுத்தைகள் இயக்கம்)*

தாழ்த்தப்பட்டவர்களுக்கான அரசியல், பொருளியல் ஆகிய வற்றைத் தீர்மானிக்கக்கூடிய ஆற்றல் தாழ்த்தப்பட்டவர்களுக்கே இருக்கவேண்டும். ஈழத்தமிழர்களுக்கான போராட்டத்தை முன்னெடுக்கும் போது தாழ்த்தப்பட்டவர்கள் அதிலிருந்து அயன்மைப்படவில்லையே. மண்ணுரிமைப் போருக்கான போராட்டங்களில் உயிர்நீத்த வரலாறு தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கிறது. தமிழ்த்தேசியம் பேசும்போது ஒன்றுபட்டு அனைவரும் வருகிறபோது சாதியொழிப்புப் போராட்டத்திற்குத் தமிழ்த் தேசியம் பேசுவோர் எத்தனைப்பேர் முன் வருகிறார்கள்?

2. இறை. பொற்கொடி *(திருவள்ளுவர் மழலையர் பள்ளி)*

ஆரியர்கள் வந்தபிறகுதான் இப்போதுள்ள சாதிகள் வகுக்கப்பட்டன. சாதிவெறியாட்டம் ஊக்கப்படுத்தப்பட்டது. அவ் வழியிலேயே மேல்மட்டச் சாதியினர் மேற்கொண்டு அடிமட்ட சாதியினரை அடக்கியொடுக்கி வருகின்றனர். சாதிக்கொடுமை தலை விரித்தாடுகிற இந்தக் காலகட்டத்தில் இந்திய விடுதலை நாள் பொன்விழா கொண்டாடுகிறார்கள். இந்த அரசு பொன்விழாவிற்க்காகக் கோடிக்கணக்காகச் செலவழிக்கிறது. அகவிலை ஏற்றம் அடித்தட்டு மக்களை வாட்டுகிறது. இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கட்டும்

தொகுப்பு வீடுகளைக்கூட ஊரைவிட்டு ஒதுக்குப்புறமாக கட்டிக் கொடுக்கிறது. நல்ல வளமான பகுதிகளில் அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தந்தால் என்ன?...... அரசு வேலைவாய்ப்புகளில் உயர்மட்ட வேலைகளை எல்லாம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கே தரவேண்டும்.

3. நடராசன் *(மக்கள் பண்பாட்டுப் பேரவை)*

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த இனக்குழுக்களே சாதிகளாக இறுகிப்போயுள்ளன. இராமராச்சியத்தின் குறிக்கோள் நிலவுடைமையைக் கட்டிக்காப்பது. ஆர்.எசு.எசு., பாரதீய சனதாக் கட்சி ஆகியவை இப்போது அதைத்தான் வலியுறுத்துகின்றன. தென்மாவட்டக் கலவரங்களைப் பார்க்கும் தமிழ்க் குமுகம் ஒரு நெருக்கடியான காலக் கட்டத்தில் இருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் எழுச்சி என்பது தமிழக அளவில் இல்லாமல் இந்தியா முழுவதும் காணப்படுகிறது. இந்த எழுச்சிப் போராட்டம் சாதியொழிப்பிற்கு வழிகோலும். தென்மாவட்டக் கலவரங்களைத் தன்னார்வக் குழுக்கள் திசைதிருப்பிப் போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்கின்றன. இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் அவற்றின் செயல்பாடு அதிகமாக இருக்கிறது.

4. பூங்குன்றன் *(உலகத்தமிழின முன்னேற்றக்கழகம்)*

சாதிகளின் அடையாளம் மரபு வழிப்பட்ட தொழில்களால் தனி மாந்த நிலையில் காணப்படுகிறது. மேலும் புறநிலைத் தோற்றங்களாகிய பூணூல் அணிதல், நெற்றியில் குறி இட்டுக்கொள்ளுதல் போன்ற அடையாளங்களில் காணப்படுகிறது. தொழில்களைப் பொறுத்து இழிவாகக் கருதப்படும் துணி துவைத்தல், கழிவகற்றல் போன்றவற்றை குறிப்பிட்ட சில சாதிகளே செய்கின்றன. மேலும் பண்பாடு, பழக்கவழக்கங்கள் போன்றவற்றாலும் சாதிகள் அடையாளம் காட்டப்படுகின்றன. அரசினுடைய போக்குவரத்துக் கழகங்களுக்குப் பெயர்வைத்தல் போன்ற வற்றாலும் சாதியடையாளங்கள் புலப்படுத்தப்படுகின்றன. கொத்தடிமைகள் முறை நீக்கப்பட்டுவிட்டன என் சொல்லிக் கொண்டிருந்தாலும் அவை இன்னும் நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது. இந்தப் பூசல்களை மாற்ற வேண்டுமானால் ஒவ்வொரு தனி மாந்தனும் தான் தமிழன் என்ற உணர்வுகளை வளர்த்தெடுக்க வேண்டும். சாதி யடையாளங்களை ஒவ்வொருவரும் நீக்கிக் கொள்ளவேண்டும்.

5. உஞ்சைராசன் *(தலித்துப் பண்பாட்டுப் பேரவை)*

தென்மாவட்டங்களில் நடைபெறுவது சாதிக்கலவரங்கள் என்று அரசும் தாளிகைகளும் பொதுவாகக் குறிப்பிடுகின்றன. இங்கே

தென்மொழி அவையம்கூடச் சாதிவெறியாட்டம் என்றுதான் குறிப்பிட்டுள்ளது. இதை நாம் மறு ஆய்வு செய்தாக வேண்டும். அங்கு நடைபெறுவது ஆளுமைச் சாதிகள் ஒடுக்கப்பட்ட மக்களின்மீது திட்டமிட்டுத் தாக்கும் ஆளுமைச் சாதிவெறித் தாக்குதலே என்பதை நாம் சரியாகச் சொல்லவேண்டும். பல்வேறு தலைவர்களின் பெயர்களைப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வைத்தபோது நடக்காத கலவரங்கள் சுந்தரலிங்கம் பெயர்வைத்தபோது மட்டும் நடக்கக் காரணம் என்ன. தென்மாவட்டக் கலவரங்கள் தேசிய இனச் சிக்கலுக்கு எதிராகத் திட்டமிட்டு நடத்தப்படுகின்றன என்று செய்தி பரப்பப்படுகிறது. ஆனால் அ்து உண்மையன்று. அங்கே நடப்பது தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் வாழ்வியல் உரிமைகளுக்காகத் தன்னெழுச்சியாக நடத்தும் போராட்டங்களே. இச் சிக்கல்களுக்கெல்லாம் தீர்வு சாதியொழிப்பு ஒன்றுதான். அதைத் தான் தாழ்த்தப்பட்டவர்கள் விரும்புகிறார்கள். தேசிய இனச்சிக்கல் குறித்துப் பேசுபவர்களும், வகுப்பு விடுதலை பேசுபவர்களும், தாழ்த்தப் பட்டோர் விடுதலை பற்றிப் பேசுபவர்களும் இணைந்து கைகோத்துப் போராட வேண்டிய தேவை இருக்கிறது. துண்டறிக்கைகள் சுவரொட்டிகள் அடித்து ஒட்டினால் மட்டும் போதாது. அனைவரும் களத்தில் இறங்கிப் போராட வேண்டும்.

6. தியாகு *(தமிழ் - தமிழர் இயக்கம்)*

இந்த நாட்டின் குடியரசுத் தலைவராகத் தாழ்த்தப்பட்டவர் ஒருவரை அமர்த்திவிட்டோம் என்று பேசும் ஆளும் பார்ப்பனிய வகுப்பு கள், சாதி ஆளுமையாற்றல் மேலவளவில் தாழ்த்தப்பட்டவர் ஒருவரை ஊராட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அ்தாவது நாராயணன் என்ற தாழ்த்தப்பட்டவரைத் தத்தெடுத்துக் கொள்ளமுடிந்த ஆளும் வகுப்பினரால், முருகன் என்ற தாழ்த்தப்பட்டவரைத் தத்தெடுத்துக் கொள்ள முடியவில்லை. சிறிதளவு அரசியல் மணம்கூட தாழ்த்தப்பட்ட மக்களின் மூக்கிற்குப் போய்விடக் கூடாது என்பதில் ஆளும் வகுப்புகள் தெளிவாக இருக்கின்றன. அடக்கி ஒடுக்கியவர்களுக்கு எதிராக நடத்தப்படும் கிளர்ச்சிகள்தாம் தென்மாவட்டக் கலவரங்கள். இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு அருண்சோரி, சோ போன்றவர்களின் குரல்கள் ஒலிக்கத் தொடங்கிக் கொண்டிருக்கின்றன. அவை இட ஒதுக்கீட்டுக்கு எதிரான குரல்கள். ஆதலால் நாம் இந்த நேரத்தில்தான் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். இப்போது நடைமுறையிலிருக்கும் இட ஒதுக்கீட்டிலும் கூடத் தாழ்த்தப்பட்டவர்களில் எத்தனைப் பேர் இ.ஆ.ப. (I.A.S), இ.கா.ப. (I.P.S.), களாக வரமுடிகிறது. ஆனால் இந்த இட ஒதுக்கீட்டைக் கூட அகற்ற வேண்டும் என்று அவர்களின் குரல்கள் ஒலிக்கத் தொடங்கி யுள்ளன. சந்தடி சாக்கில் அவர்கள் நுழைந்து

கெடுக்கப் பார்க்கும் இட ஒதுக்கீட்டை நாம் எந்தச் சூழ்நிலையிலும் விட்டுக்கொடுக்கக் கூடாது. அதே வேளையில் தீண்டாமை ஒழிப்புப் போராட்டம், சாதியொழிப்புப் போராட்டம் ஆகியவற்றிக்கு முகாமை கொடுத்து, அகமணமுறையை தவிர்த்துக் குமுக நயன்மைக்கான (சமூக நீதிக்கான) போராட்டத்தை முன்னெடுக்கவேண்டும். இந்த அரசமைப்பு குமுக நயன்மைக்கு எதிரானது. ஒதுக்கீடு எத்தனை விழுக்காடு என்பதைத் தீர்மானிக்கக்கூடிய ஆற்றல் நமக்கு வேண்டும். மாறாக இந்திய அரசும், அரசமைப்பும் நமக்கான விடுதலையைத் தர இயலாது. ஆகவே இந்த அரசமைப்பு மாற்றப்பட வேண்டும். அதற்குத் தமிழ்த்தேசிய எழுச்சி உருவாக வேண்டும். தாழ்த்தப்பட்டோர்களின் உரிமைக்கான எழுச்சி அதற்கு வழியமைக்கும்.

7. இரா. திருமாவளவன் *(விடுதலைச் சிறுத்தைகள்)*

தென்மாவட்டக் கலவரங்கள் என்பது அடக்கி ஒடுக்கப்பட்டு வாழ்விழந்து, உடைமையிழந்து வாழுகின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் ஆளுமைச் சாதிகளுக்கு எதிராக நடத்தும் உரிமைப் போராட்டம் ஆகுமே தவிர சாதிவெறியாட்டம் என்பதாகப் பொதுமையாகக் கூறமுடியாது. மேலவளவு படுகொலைக்குப்பிறகு புரட்சி பேசுகின்ற நச்சல் பாரி இயக்கங்களும், அரசியல் கட்சிகளும் அம்பலப்பட்டுப் போய் நிற்கின்றன. தீண்டாமை என்பதைக்கூட தீண்டத்தகாத சொல்லாகக் கருதிய இந்தியப் பொதுவுடைமை, மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சிகள்கூட இப்போது தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் நடத்துகின்றன. அது தீண்டாமை ஒழிப்பு என்பதாக அல்லாமல் சாதியொழிப்பு போராட்டமாக நடக்க வேண்டும். இதுதவிர தாளிகைகளும் பல்வேறு அரசியல் கட்சிகளும் களத்தில் நின்று போராடிக் கொண்டிருக்கும் இயக்கங்களைப் பார்த்து வக்கணை பேசுவதிலேயே குறியாக இருக்கின்றன. அவற்றை விடுத்து, களப்பணி செய்பவர்களைக் கொச்சைப் படுத்துவதை விடுத்து எங்களோடு இணைந்து போராட வாருங்கள், அல்லது தட்டிக்கொடுத்து ஊக்க மூட்டுங்கள், மாறாகக் குட்டிக் கொண்டும், குறைகூறிக்கொண்டும் எங்களுக்குத் தடையாக இருக்காதீர்கள்.

8. இரா. எழில்மலை *(பாட்டாளி மக்கள் கட்சி)*

தாளிகை பரப்பும் செய்திகள் யாவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகவே இருக்கின்றன. இப்போது நடக்கும் தென்மாவட்டக் கலவரங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தாக்குதல் என்றுதான் செய்திகள் போடவேண்டும். தாழ்த்தப்பட்டவர்கள் இந்துக்களே அல்லர். வரலாற்றை அடிப்படையாக வைத்துத் தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று போராடுகிறார்கள். அதைக் கொச்சைப்படுத்தும் முறையில் தாளிகைகள்

பொதுவாகச் சாதிக்கலவரங்கள் என்று செய்திகள் வெளியிட்டு அவர் களுடைய உரிமைப் போராட்டங்களை மறைக்க முயலுகின்றன. இந்தப் போக்கை கண்டிக்க வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில்தான் அருண்சோரி போன்றவர்கள் அம்பேற்கர் மீது சேறுவாரி இறைக்கிறார்கள். அம்பேற்கர் என்பவர் இந்தத் தாழ்த்தப்பட்டவர்களின் விடிவெள்ளி. அவர்களுக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் போராடிய விடுதலை வீரர். அவரைப்பற்றி எழுதுவதற்கு அருண்சோரிக்குச் சிறிதும் அருகதை இல்லை. அந்தச் செயலை வன்மையாக கண்டிக்கிறேன். பார்ப்பனர்கள் எந்த அளவுக்கு இன ஒற்றுமையாக இருப்பதைப் பாருங்கள். அவர்களுடைய அந்த இன ஒற்றுமைதான் அவர்களுடைய வெற்றிக்கும் நம்முடைய வீழ்ச்சிக் கும் காரணமாக இருக்கிறது. தமிழ்நாட்டில் ஒரு பிள்ளையாருக்குப் பால் குடிக்க வைத்துவிட்ட அடுத்த அரைமணி நேரத்தில் லண்டனில் பிள்ளையாரைப் பால்குடிக்க வைத்து அவனுடைய ஒற்றுமையைக் காண்பித்து விடுகிறானே. இதைப்பார்த்து எவ்வளவு ஒற்றுமையாக இருக்கவேண்டும். இந்து வருண ஒழுக்கத்துக்கு எதிராகப் பார்ப்பனர்களுக்கு எதிராக, அவர்களுடைய வல்லாண்மைகளுக்கு எதிராக தம் வாழ்நாள் முழுதும் போராடிய பாபாசாகேபு அம்பேற்கரின் போர்க்குணமிக்க எழுத்துகள், பேச்சுகள், போராட்டங்கள் ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டு ஒற்றுமையுடன் போராடி நமது உரிமையை மீட்டெடுக்க வேண்டும்.

9. **அருளியார்** (இயக்குநர் - தூயதமிழ்ச் சொல்லாக்க அகரமுதலிகள் துறை)

சாதி என்பது தமிழர்களைச் சீழ்போல் பிடித்துக் கொண்டுள்ளது. சாதிகளை விடாமல் பற்றிக் கொள்வதுதான் இங்கே பெருமையாக இருக்கிறது. பலபேருக்குச் சாதிதான் அவர்களுடைய பெயராக இருக்கிறது. சாதி என்பது ஒவ்வொருவர் மனத்திலும் மிக ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு கருத்து. அஃது அவ்வளவு எளிதில் மாற்றக்கூடிய ஒரு கருத்தன்று. இதற்காகப் பல்வேறு அறிவுநிலைகளிலே சிந்திக்க வேண்டியிருக்கிறது. இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒடுக்கப்பட்டோர் இயக்கங் களையும், மக்களையும் வழிநடத்திச் செல்லக்கூடியவர்கள் மிக ஆழமாக இந்தச் சாதிச் சிக்கலை ஆராய்ந்து பல்வேறு வகைப்பட்டவர்களையும் அரவணைத்துச் செயல்பட்டுச் சாதி ஒழிப்பை முன்னிறுத்திப் போராட வேண்டும்.

மாக்கடலும் தமிழ்க் கலையும்

● `Indian Ocean' என்பதை 'இந்தியப் பெருங்கடல்' என்னாது, 'இந்துமாவாரி' என்று மொழிஞாயிறு பாவாணர் அவர்களும் 'இந்துப் பெருங்கடல்' என்று பாவலரேறு அவர்களும் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். 'இந்து' என்பது மதச்சார்பையும், 'இந்திய' என்பது நிலச்சார்பையும் காட்டுவல்லவா? எது சரி? விளக்கம் வேண்டுகிறேன்.

-- கல்பாக்கம் வேம்பையன், மறைமலைநகர்.

◆ `Indian Ocean' என்பதற்கு 'இந்தியப் பெருங்கடல்' என்பதே நேரிது. 'இந்து' என்பது மதச்சார்பையும், 'இந்திய' என்பது நிலச்சார்பையும் காட்டுவன என்னுந் தங்கள் கருத்து இற்றை நிலையில் சரியானதே. ஆயினும், முந்தைய நிலையில் 'இந்து' என்பது 'இந்திய' என்னும் பொருளிலேயே ஆளப்பட்டுள்ளது. 'இந்து மதம்' என்பதிலும் 'இந்து' என்னுஞ் சொல் 'இந்திய' என்னும் பொருளிலேயே இடம்பெற்றுள்ளது. கடந்த காலத்தில் தமிழில் வெளிவந்த ஞாலநூல், ஞாலப்படம் ஆகியவற்றில் 'இந்து மகா சமுத்திரம்' என்பதே பெருவழக்காக இருந்தமையை நோக்கினும் 'இந்துமாவாரி' 'இந்துமாக்கடல்' என்பன பிழையானவை அல்ல என்பது பெறப்படும்.

இந்தியாவில் தோன்றினும் இங்கு வழக்கற்றுப் போன புத்த மதத்தையும், அருகிய வழக்கான சமண மதத்தையுந் தவிர்த்து, பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்ட சிவனியம், மாலியம் ஆகிய தமிழ மதங்களையும், வேத மதத்தையும் கூட்டிக் குழப்பி அதற்கு இந்துமதம் எனப் பெயர் சூட்டப் பெற்று, அது தனியொரு மதம் போன்று வழக்கூன்றுவதற்கு முன் இந்து என்பது இந்திய என்னும் பொருளதே. அது மேற்கூறியாங்கு இந்து மதம் என்னும் பெயராலேயும் அறியப்படும்.

இது கிடக்க, இனி இந்தியப் பெருங்கடலும் நமக்கு வேண்டிய தில்லை. குமரிக் கண்டத்தை உள்ளடக்கிய அக்கடலைக் 'குமரி மாக்கடல்' என்றே வழங்குதல் வேண்டும். அதுவே சரியான வரலாற்றுக் குறியீடு.

● 'கலை' என்னுஞ்சொல் 'கலா' என்னும் சமற்கிருதச் சொல்லின் தமிழ்வடிவமாகவே பயன்படுத்தப்படுவதாக 'தாமரை' (ஆகத்து) இதழில் அம்மையார் ஒருவர் எழுதியுள்ளாரே, இது சரிதானா?

-- மாடன், சென்னை-4

◆ 'கலை' என்பது 'கல்' என்னும் வேரடியாகத் தோன்றிய தூய தமிழ்ச்சொல். சமற்கிருதத்தில் அது கலா என்று திரித்து வழங்கப் படுகின்றது. ஐகார ஈற்றுத் தமிழ்ச் சொற்களை ஆகார ஈறாகச் சமற் கிருதம் திரித்துக் கொள்கிறது. எ-டு: மாலை - மாலா.

கலை என்பதற்குச் சமற்கிருதத்தில் வேரில்லை என்பது மொழி ஞாயிறு பாவாணர் குறிப்பு.

-குரிசில்

(அட்டை 2 - ஆம் பக்கத் தொடர்ச்சி)

"பிராமணன் மூடனாக இருந்தாலும் அவனே மேலான தெய்வம்"
மனு 9-317.

"பெண்களையும் சூத்திரர்களையும் கொல்வது மிகவும் குறைந்த பாவமாகும்" மனு: 11-66.

"ஒரு பிராமணன் ஒரு தவளையைக் கொன்றால் செய்ய வேண்டிய பிராயச்சித்தம் எதுவோ, அதைத்தான் ஒரு சூத்திரனைக் கொன்றாலும் செய்ய வேண்டும்" மனு 11-131-132.

"சூத்திரன் பிராம்மணனுக்குப் பணிவிடை செய்வதே தவமாகும்"
மனு 11 : 285

"சூத்திரன் பொருள் சம்பாதித்தால் அது அவனுடைய எஜமானாகிய பிராமணனுக்குச் சேர வேண்டுமேயன்றிச் சம்பாதிப்பவனுக்குச் சேரலாகாது" மனு 9 - 416

"பிராமண குலத்தில் பிறந்தவன் ஆசாரமில்லாதவனாயினும் அவன் நீதி செலுத்தலாம். சூத்திரன் ஒருபோதும் நீதி செலுத்தலாகாது"
மனு 8 - 20

-- இவ்வெடுத்துக்காட்டுகளே ஆரியவியல் தர்மத்தின் 'ஒரு குலத்துக் கொரு நீதி' சொல்லும் ஓரவஞ்சகத் தன்மையையும் அதன் தாழ்ச்சியையும் இழிவையும் கொடுமையையும் உணர்ந்து கொள்ளப் போதுமானவையாகும்.

ஆனால், தமிழியலின்படி "பொதுமையே - பொதுவுணர்வே - மக்கள் யாவர்க்கும் இருக்க வேண்டிய நல்லுணர்வுகளே - நன்னெறிகளே அறம்" என்பது திருவள்ளுவம்.

அறம் என்பது குமுகாய ஒழுங்குமுறை அமைப்பு (Social Order) என்பர் திருக்குறள் உண்மைப்பொருள் நூலாசிரியர். ஆனால் குமுகாய ஒழுங்குமுறை அமைப்பு - நாமாக அமைத்துக் கொள்ளும் அமைப்பு அன்று. மாந்த உணர்வின் படிநிலை வளர்ச்சியால் வடிவமுற்ற இயற்கை அமைவு ஆகும். கல்லும் முள்ளும், கரம்பும் புதரும், காடும் மேடும், மலையும் மடுவுமாய்க் கிடந்த நிலத்தில், வழி தெரியாமல் தள்ளாடித் தள்ளாடிக் கல்லை விலக்கி, முள்ளை நீக்கிக் கரம்பின் விலகிக், காட்டின் நிலை தெரிந்து, மலையைச் சுற்றி, மடுவின் இறங்கிக் காலூன்றி நடந்த மாந்தன், காலப் போக்கில் ஒரு பாதையை அமைத்துக் கொண்டானே - அந்தப் பாதையை அமைத்துக் கொண்ட பாதை என்று கூறாது அமைந்த பாதை என்று கூறுவதே மிகவும் பொருந்துவதாகும்.

இனி, அது திருவள்ளுவர்க்கோ, அல்லது தமிழர்க்கோ மட்டுமே சொந்தமான உணர்வு அன்று, மாந்தவினமே உற்றுணர்ந்து அறிய வேண்டிய தெளிய வேண்டிய இயற்கை உணர்வாகும். விலங்குத்

தன்மையினின்று மேலேறிய மாந்தன், அதனினும் மேலான உயிருணர்வுக்குத் தேவை என்று கண்டு கொண்ட ஓர் ஒப்புரவுணர்வாகும். விலங்குகளிடம் இதைப் புகுத்த முடியாது; புகட்டவும் முடியாது. அதேபோல் மாந்தர்களால் இதைத் தள்ளவும் முடியாது; தவிர்க்கவும் முடியாது. மொத்தத்தில் நீர்த் தேக்கத்திற்கு இயற்கையாய் அமைந்த கரைபோல மாந்த நிலைப்பாட்டிற்கு இயற்கையாக அமைந்த பொதுமை உணர்வே அறம் என்க.

இந்த உணர்வை வளர்த்தெடுக்க வேண்டியதும், நிலைப்படுத்திக் கொள்ள வேண்டியதுமான முயற்சிகளை, செயல்களைச் செய்பவர்களே திருவள்ளுவர் போலும் மெய்ப்பொருளாசிரியர்கள் ஆவர். அத்தகு முயற்சிகளே திருக்குறள் போலும் நூல்கள் ஆகும். இதில் தமிழ்மொழிக்கும் தமிழினத்திற்கும் உள்ள சிறப்பும் பெருமையும் என்னவென்றால், இது மிகு தொன்மை முன்மையினமான தமிழினத்துள் தான், முன்தோன்றி மூத்த இனநலமாக மலர்ச்சி பெற்றிருந்தது என்பதே.

இனி, உலகின் பிற மதவியலார் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு நூல் திருமறை நூலாக இருப்பது போலவே, உலகப் பொதுமையாகவும், அறத் தோன்றலாகவும் உள்ள திருக்குறளை, ஆர்வ மிகுதியாலும் அளவிறந்த மதிப்பாலும் உலகப் பொதுமறை என்று பெருமையுடன் சிலர் கூறியும் எழுதியும் வருகின்றனர். அது சரியன்று.

'மறை' என்பது அறிந்தோ அறியாமலோ 'வேதம்' என்னும் பொருளில் பயன்படுத்தப் பெற்று வருகிற ஒரு சொல். மறைவான பொருள்களை உணர்த்துவதால் 'மறை' என்றும், அதற்குத் 'திரு' என்னும் அடை கொடுத்துத் 'திருமறை' என்றும் கூறப்பெறுகின்றது. ஆனால் 'வேதம்' என்னும் சொல்லுக்கு 'அறிவுநூல்' என்பதே பொருள். அதுவும் தமிழ் மூலம் கொண்டதே என்பார் பாவாணர்.

இதைப் பின்பற்றியே தமிழிலும் சிலர் திருக்குறளைத் தமிழர் வேதமாக்க வேண்டும் என்னும் நயப்பான குருட்டாசையில் தமிழ் வேதம் என்றும், அதன் வழி 'தமிழ்மறை' என்றும் அதன் விரிவாக 'உலகப் பொதுமறை' என்றும் கூறி வருகின்றனர். இஃது, ஆரியத்தை மறைவாக மேம்படுத்திக் கூறுவதே ஆகும்.

வேதம் ஆரியர்க்கே உரியதும், பிறர்க்கு மறுக்கப் பட்டதுமான நூலாகவே இருந்து வந்திருக்கிறது. எனவே 'மறை' என்பது அதற்கு ஒருவேளை பொருந்தலாம். ஆனால் திருக்குறள் என்றைக்குமே எவர்க்குமே மறைக்கப் பெற்றதோ, தவிர்க்கப் பெற்றதோ அன்று. அந்நூல் உலகில் உள்ளோர் யாவர்க்கும் பொதுவான-பொதுவுடைமையான நூலே ஆகும். எனவே, திருக்குறளை மறைநூல் என்று கூறுவதைவிட, அறநூல், அறிவுநூல், வாழ்வியல் நூல் என்றவாறு சொல்லப் பெறுவதே மிகவும் பொருந்துவதாகும். ☆

தமிழின் அடுத்த படிநிலைச் செலவு

தாம் கற்றது அறிந்தது பெற்றது அனைத்தையும் இலக்கியம் செய்து மொழியில் பதிக்கும் பண்பு பழந்தமிழர்களிடம் இருந்தது. இவ்வளவு இலக்கியப் பதிவுகள் தமிழில் உள்ளதற்கு அதுவே காரணியமாக இருந்தது. அதனால் மொழி சிறந்து செழித்தது.

இன்றைக்கு இலக்கியம் படைப்பாரும் படிப்பாரும் குறைந்து வருகின்றனர். காலப்போக்கில் எழுத்து வடிவ இலக்கியம் மாறி கேட்பதற்கும் காண்பதற்கும் தக்க அமைப்பில் மட்டுமே இன்றைக்குச் சுவைப்பார்கள் என்ற நிலை உருவாகிவிட்டது.

இலக்கியத்தில் பதித்தவற்றை ஓலைச்சுவடியில் பதித்து போய் தாளில் பதித்து, இன்றைக்கு அதையும் கடந்து கணிப்பொறியில் வகை பிரித்துப் பதித்து வைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. தமிழ் அந்த அடுத்த படிமலர்ச்சியை நோக்கி நகர்கிறது. இதைக்காணும் வாய்ப்பு இன்று வாழும் தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ளது.

கடந்த கிழமை 'நக்கீரன்' இதழில் இளைஞர்கள் குழுவொன்று தமிழுக்கும், திருக்குறளுக்கும் மென்மியம் (software) அமைத்திருப்பதாகவும் அரசு உதவி கிடைத்தால் இன்னும் பெரிய அளவில் செய்ய முடியும் என்னும் செய்தி வந்திருந்தது நம்மைக் கவர்ந்தது. தென்மொழிச் சார்பில் அவர்களைக் காணச் சென்றோம்.

அவர்களின் செயற்பாடுகள் முழுமையாகத் தெரியாமல் தமிழ்மொழிக்கும், திருக்குறளுக்கும் ஏதோ செய்துள்ளனர் என்ற நிலை மட்டுந்தான் நமக்குத் தெரிந்தது.

அங்குச் சென்றபின்தான் அவர்கள் செய்திருந்த பணிகளைப் பார்க்க நேர்ந்தது. அவர்கள் செய்த பணியை நாம் புரிந்து கொண்டது மிகக் குறைவு. அதனால் ஏற்படும் விளைவுகளை அதாவது பயன்களை மட்டுமே வியக்க நேர்ந்தது. எனவே நாம் கண்ட செய்திகளைப் பரிமாறிக் கொள்வதன் வழி அவர்கள் செய்ததை நாம் கலந்து கொள்ள இயலும்.

'இன்றைக்கு உலகின் புகழ்பெற்ற கணிப்பொறி நிறுவனங்களில் மென்மியத் தொழில் நுட்பத்தில் (software Technology) தமிழர்கள்

முகாமையான இடம் பெற்றுள்ளனர். தமிழர்கள் பல்வேறு துறை யினர்க்காகவும் பணியாற்றுகின்றனர். தமிழுக்காகப் பணியாற்ற வில்லை. உலகமட்டத்தில் இதை நாம் செய்தால் என்ன? தமிழர்களை உலக மட்டத்தில் உயர்த்தும் பணி இதுவாகத் தங்களை நமக்கு அறிமுகப் படுத்திக் கொண்டு தங்களின் பணிகளைக் காட்டினர்.

'சென்னைக் கவிகள்' என்ற பெயரோடு மனோசு, சத்தியன் தேவேந்திரன் முதலான இளைஞர்கள் துடிப்போடு இப்பணியில் ஈடுபட் டுள்ளனர். அவர்கள் தமிழறிஞர்கள் அல்லர். தமிழ் மீது ஆறாப்பற்றுக் கொண்டும் இப்பணியில் இறங்க வில்லை. கணிப்பொறியில் வல்லவர் களாக அவர்கள் மாறியபின் வெளிநாடுகளுக்குச் சென்று வேலைவாய்ப்புத் தேட முயற்சிசெய்து கொண்டிருக்கையில், வெளிநாடு களில் தமிழர்கள் பெரும்பாலோர் பணியாற்றுவதைக் கேள்வியுற்று தமிழுக்காக நாம் இணைந்து செய்தால் என்ன என்ற எண்ணத்தின் விளைவே இவர்களின் இன்றைய பணி.

இன்றைக்கு முந்நூன்னூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நாடக எழுத்தாளர் சேக்கசுபியர் மூலை முடுக்கெல்லாம் கொண்டாடப் படுகிறார். இலேவ் தல்சுத்தோய் (Leo Talstoy) இன்றைக்கு உலகமுழுவதும் அறிமுகமாகியுள்ளார். உலக மக்களுக்குப் பொதுவான ஒரு வாழ்வு நெறியைப் வடிவமைத்த திருவள்ளுவரை உலகில் யாரும் அறியும்படி செய்ய வில்லையே. அவரை உலகில் பரப்ப இன்றைய வளர்ச்சிக் கருவியான கணிப்பொறிவழி திருக்குறளைத் தொகுப்புச் செய்தால் என்ன என்றே திருக்குறளைப் பற்றிக் கணிப்பொறிக் களஞ்சியம் உருவாக்கியதாக அவர்கள் கூறினர்.

தமிழுக்குப் பல சொல்லமைப்பு (word processing) மென்மியங்கள் உருவாக்கப்பெற்று இன்று விற்பனையாகிக் கொண்டுள்ளன. அவை பெரும்பாலும் ஒன்றைப் போன்ற அமைப்பிலேயே கட்டமைக்கப் பெற்றவை. அவற்றினின்று பல மாறுதல்களுடனும் சில சிறப்புகளுடனும் தமிழ் மென்மியம் (Tamil Software) உருவாக்கியுள்ளனர்.

இதுவரை அமைந்த தமிழ் மென்மியங்களில் தமிழ் எழுத்து உருவாகுமே தவிரக் கட்டளைகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே இருக்கும். ஆனால் இவர்கள் கட்டளைகளைத் தமிழில் Edit, File, Help என்பதற்குத் தொகு, கோப்பு, உதவி என்றவாறு அமைந்திருந்தனர். யாரும் எளிதில் தமிழில் புரிந்து கொள்ளும் வகையில் இருந்தது.

சொல்வரிசை என்ற வகையில் சொல் நிகண்டு (Thesarus) கொடுக்கப்பட்டுள்ளது. இதன் உதவியால் ஒரு சொல்லின் எழுத்துகளைச் சரி பார்த்துக் கொள்ளலாம். ஏனெனில் இப்போது ர-ற, ல-ள, ன-ண மாறுபாடுகள் நிரம்ப நிகழ்கின்றன.

தமிழீழமும் தமிழ்நாடும்

-கரடிப்பட்டி க. கண்ணன்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் கடந்தகால வரலாற்றிலிருந்து, தமிழகத் தேசிய உணர்வாளர்கள் தெளிவான படிப்பினையைப் பெற்றுள்ளோம். தமிழீழ மக்களுக்குச் சிங்கள இனவெறி அரசைவிட, இந்திய ஆரியப் பார்ப்பன வெறி அரசே மிகப்பெரும் எதிரியாக இருப்பதை, இந்திய - இலங்கை ஒப்பந்தமும், இந்திய அமைதிப்படையின் அழிவுகளுமே எடுத்துக்காட்டுவனவாகும்.

மேலும், பக்கத்து நாடுகளைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துச் சுரண்டுவதற்குப் பல்வேறு சூழ்ச்சிகளை இந்திய ஆரியப் பார்ப்பனிய முதலாளியர் செய்து கொண்டிருப்பதை நாம் வெளிப்படையாகவே பார்க்கலாம். இந்தியாவில் பல்வேறு மொழித் தேசிய இனங்களை ஒடுக்கிச் சுரண்டி வரும் இந்திய அரசு, தனக்கு எதிராகவுள்ள பாகித்தானில் எழும் தேசிய இனப் போராட்டங்களுக்கு மறைமுகமாக உதவி செய்யுமே தவிர, தமிழினப் போராட்டத்திற்கு அது என்றுமே உதவி செய்யாது; எப்பொழுதும் எதிராகவே இயங்கும். சில நேரங்களில் அணைத்து அழிக்கும் கொள்கையையும் கடைப்பிடிக்கும்.

ஆகவே, தமிழீழ மக்களுக்கு ஆதரவு என்பது தமிழக மக்கள் விடுதலையை முன்னெடுப்பதேயாகும். இந்திய அரசை இங்கேயே வலுக் குறைக்கும் போதுதான் தமிழகமும், தமிழீழமும் விடுதலை பெற முடியும். அங்குச் சிங்கள இனவெறி அரசால் நேரடித் தாக்கத்தினுள் தமிழீழத் தேசிய முரண்பாடு முன்னுக்கு வந்து, தொடர்ந்து விடுதலைக்கான போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழகத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இறுக்கமாக்கப்பட்ட ஏற்றத்தாழ்வான சாதிய வேறுபாட்டு உணர்வுகளும், அண்மைக் காலங்களில் செயற்கையாக உருவாக்கப்பட்ட இந்தியத் தேசிய உணர்வும், திராவிடத் தேசிய உணர்வும், இயற்கையான தமிழ்த் தேசிய உணர்வை வளரவிடாமலே செய்துள்ளன. குமுகாய நிலையிலும் பொருளியல் நிலையிலும் அடித்தளத்திலுள்ள மக்கள் முழுமையாகப் பங்கு பெறாமல், சிங்கள அரசையும், இந்திய அரசையும், இவ்வாளுமை அரசுகளுக்குத் துணையாக இருந்து இயங்கும் வல்லரசுகளையும் தொடர்ந்து நாம் எதிர்கொள்ள முடியாது.

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், படை நிலைகளில் சில வெற்றிகளைப் பெற்றாலும், சிங்கள அரசுக்குப் பின்னாலிருந்து உதவி செய்யக்கூடிய இந்திய அரசும் சில உலக வல்லரசுகளும் இருப்பதை நாம் மறந்துவிட முடியாது.

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்"

'எரிமலை' ஏட்டுக்கு விடுத்த கடிதக் கட்டுரையின் சுருக்கம்.

என்ற நம் திருவள்ளுவப் பேராசானின் வழிகாட்டுதலை நாம் என்றும் மனங் கொள்ள வேண்டும்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இசுலாமிய மதக் கோட்பாடுகளைப் பின்பற்றுகின்ற மக்களையும் மற்ற சிறுபான்மை மக்களையும் குடியாட்சி முறையில் இணைத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்குபெற வைக்கவேண்டும். அவ்வாறே சிங்களத் தேசிய இனத்திலும் அரசுக்கு எதிரானவர்களை நமக்குத் துணையாக ஆக்கிக் கொள்ள வேண்டும். சிங்கள இனவெறி அரசுக்கு நேர் எதிராக நாம் தமிழின வெறியை ஊட்டமுடியாது; நம் தமிழினப் பண்பாட்டுக்கும் அது பொருந்தாது. தமிழீழத் தேசிய விடுதலையை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும் அது தடையாகவே இருக்கும். ஒவ்வொரு கட்டத்திலும் குடிநாயக முறையை பின்பற்றுவதே நம் வலுவைக் கூட்டுவதற்கும், எதிரியின் வலுவைக் குறைப்பதற்கும் துணை செய்யும். ஒரு காலக் கட்டத்தில் சோவியத்து நாட்டையும் சீனாவையும் மீட்ட இலெனினும் மாவோவும் குடியாட்சி முறையிலேயே தங்களுக்குத் துணையானவர்களை விரிவாக்கிக் கொண்டு எதிரிகளை வலுவிழக்கச் செய்து - தனிமைப்படுத்தி அழித்தார்கள். கடந்தகாலச் சில தவறான நடைமுறைகளைத் திருத்திக்கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டம் முன்னோக்கிச் செல்லும் என்று நம்புகிறோம்.

இப்பொழுது தமிழ்நாட்டில் தமிழ்த் தேசிய முரண்பாடும், இனத்திற்குள் உள்ளீடாகவுள்ள ஒடுக்கப்பட்ட சாதிய முரண்பாடும் முன்னோக்கி வந்துள்ளன. ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையோடு தான் இங்குத் தமிழகத் தேசிய விடுதலையை வென்றெடுக்க முடியும். ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க முடியாத அளவிற்கு இங்கு அரசியல் சூழல் உருவாகி இருக்கிறது. இந்தியாவில் ஆரியப் பார்ப்பனியர் இவ்விரண்டு முகாமையான முரண்பாடுகளையும் தனித்தனியாகக் கையாண்டே தொடர்ந்து ஆளுமை செய்து வருகின்றனர். ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாகச் சில சலுகைகளைக் கொடுத்து, சாதிய ஒடுக்குமுறையும், தமிழகத் தேசிய ஒடுக்கு முறையும் ஒரு குவி முனையில் இணைந்து பேராற்றலாகத் தங்களுக்கு எதிராக வந்து விடாமல், விழிப்போடிருந்து ஆரியப் பார்ப்பனர் அரசியல் வழி இச் சாதியக் குமுக அமைப்பை கட்டிக் காக்கின்றனர்.

உலக வல்லரசுகளும் தங்கள் சுரண்டலுக்குத் துணையாக இருக்கும் இந்திய அரசுக்குப் பின்புலமாக இருந்து தங்கள் மேலாளுமையைச் செலுத்துகின்றன. ஆகவே மக்கள் விடுதலையைப் பற்றிச் சிந்திக்கின்ற நாம் நமக்குத் துணையானவர்களையும், எதிரானவர்களையும் நுணுகிக் கணிக்க வேண்டியுள்ளது. நம் எதிரிகளின் செயல்பாடுகளிலிருந்தே நம் போராட்ட முறைகளை வகுத்துக் கொள்வோம்.

வெல்க தமிழக, தமிழீழ விடுதலைப் போராட்டங்கள்!

'ஏர்ந்தனர் தமிழர் என்று இயம்பட்டா குழலில்'

--- தமிழர் விடியல்

பொதுநலவுணர்வுள்ள இத்தமிழின மக்களைச் சாதிவேறுபாடின்றி ஒன்றுபடுத்திய ஒரே தலைவர் பாவலரேறு அவர்களே. அவரோடு இணைந்த அருந்தமிழ் அன்பர்கள் அனைவரும் இன்னமும் சாதியுணர்வின்றி வாழ்வது அதற்கு எடுத்துக்காட்டாகும்.

ஒவ்வொரு குழு கூடும்போதும் 'நாம் தமிழர்' - என்றும், நாம் அனைவரும் தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பெருமையுடன் தம் தொண்டர்களுடன் உரையாடி நம் தமிழர்களுக்குப் பெருமித எண்ணத்தைத் தலைவர்கள் உருவாக்கினால், சாதியுணர்வு தலைதூக்கும் நிலையைச் சிறிதுசிறிதாக மாற்றமடையச் செய்ய முடியும். பொருளியலில் தாழ்ந்து கிடக்கும் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட தமிழன் எவனாயினும் சாதி வேறுபாடின்றி அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியுறக் கைகொடுத்துதவிச் சிறிது சிறிதாக, குமுகாய மதிப்பீட்டிலும் எல்லாத் தமிழர்களும் சமமாக மதிக்கப்படும் நிலையை உருவாக்கும் பெரும் பொறுப்பை, தன் தனிநலவாழ்வை ஈகஞ் செய்தாகிலும் ஏற்கவேண்டும்.

தமிழர்களின் இனக்குலைவைச் சாதியின்மூலம் உருவாக்கி, பார்ப்பனன் பார்த்து சுவைத்து ஊக்கத்தோடு ஆக்கமுறும் நிலையை அடியோடு அறுத்தெறிய வேண்டும். ஒரே தெருவினனாயினும், ஒரே ஊரினனாயினும், நண்பனாயினும் சாதியை நோக்கி மனந்திரிந்து தம்முள் சண்டையிட்டுப் பகைமையை உருவாக்கும் நிலையைத் தலைவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து கண்டித்துத் தமிழினத்தை ஒன்றுபடுத்த முன்வரவேண்டும்.

வானென ஓங்கிடும் கட்டடங் கள்,பல
வாழக்கை புதுமைகள் செய்கிறோம்' - விண்
மீனெனப் பூத்த உயிர்களி டையே,கீழ்
மேலென வேற்றுமை பெய்கிறோம்'.
தானுயர் வென்றிடும் சாதிகளும் ஒன்றிற்
தாழ்ந்த நிலைக்கொன்று தாழ்கையில் - தாழ்(வு)
ஏனெனக் கேட்க நடுங்கிடு வோம்; அறி
வூக்கமி லாதவோர் தன்மையில்'.

'சாதிப் புழுக்கள் நெளிந்திடு மோர்மொத்தைச்
சாணித் திரளையாய் வாழ்கையில் - நாம்
ஓதி யுணர்ந்திட்ட மக்களைப் போல்; உல
கோருக் குரைக்கத் துடிக்கிறோம் !
காதுயிர்ப் பற்றசெ விடர்களாய், இரு
கண்களி லாத குருடராய் - நில
வீதி யுலாவரப் பார்த்திடு வோம் ! என்ன
வேட்கையில் இங்ஙனம் செய்குவோம் ?

- என்று நம்மின் இழிநிலையை பாவலரேறு ஐயா அவர்கள் உணர்த்தியுணர்த்தி உருக்குலைவை அவர்கள் பெற்றதன்றி, நாம் வேறு என்ன உருவாக்கத்தை இம்மண்ணில் கண்டோம்.

அனைத்து உணர்வுகளையுமிழந்து வெற்றுடல்களாய் உயிர்மானச் சூடின்றி உலவிவரும் தமிழினம் மொழியால், இனத்தால் நாட்டுணர்வால் ஒன்றுபட்டு என்று உயரிய ஒளித்தமிழகத்தை உருவாக்குமோ அதுவரை தமிழர்கள் ஓய்தல் கூடாது. ஒவ்வொரு தமிழனும் சாதியுணர்வு என்னும் நச்சுமரத்தை வேரோடு அகழ்ந் தெறிய முதலாக சாதிச் சலுகைகளை வீறுணர்வுடன் தூக்கியெறிய வேண்டும். கல்வி நிறுவனங்களில் சாதிச் சான்றிதழ் கேட்கும் அலுவலர் களுடன் போராட்டம் நடத்தித் தமிழக மக்களின் உணர்வுக் கொந்தளிப்பை அரசு புரிந்துகொண்டு கல்வி கற்கச் சாதிச் சான்றிதழ் தேவையில்லை என்று கூறுகின்ற அளவில் நம் நடைமுறை அமைய வேண்டும். சாதியமைப்புகளுக்கும், சாதியுணர்வோடு கூட்டப்படும் கூட்டங்களுக்கும் தடைபோட வேண்டும். நம்மின் எதிர்காலத் தமிழினமான நம் பிள்ளைகளுக்கு கலப்புத் திருமணத்தையே செய்து தூய தமிழகத்துக்கு விடிவுண்டாக்கி

எங்கும் தமிழர்கள் ஒன்றாய் இணைந்தனர் !
இன்னுயிர் உடல் - என நன்றாய்ப் பிணைந்தனர் !
'பொங்கும் உணர்வினால் மொழியையும் இனத்தையும்
புதுக்கினர்' - என்றே கொட்டடா முரசம் !
பூத்தது வாழ்வெனக் கொட்டடா முரசம் !

உண்மைத் தமிழர்கள் உலகெலாம் பரந்தனர் !
ஒண்டமிழ்த் தாயினை உலாவர விட்டனர் !
திண்மை வளத்தொடு தீந்தமிழ் பரப்பினர் !
தீமைகள் அகன்றவென் றூதடா சங்கம் !
தீய்ந்தது மடமையென் றூதடா சங்கம் !

முன்னைத் தமிழர்கள் மொய்த்தனர் நாடெல்லாம்!
முங்கிய பழமைகள் முகிழ்த்தன புதுமையாய்!
அன்னைத் தமிழ்மொழி உலகெலாம் ஆர்ந்திட
அலர்ந்தது பொழுதென - அறையடா முழவம்!
அழிந்தது பகையென - அறையடா முழவம்!

கீழ்த்திசை நாடுகள் கிளர்ந்தன தமிழால்!
கிளைத்தது தமிழ்க்குலம்; தீய்ந்தது கீழ்மை!
வாழ்த்திதை அளாவி எழுந்தது வானில்;
வளர்ந்தது தமிழென - மிழற்றடா யாழை!
வாழ்ந்தது நிலமென - மிழற்றடா யாழை!

செங்கதிர் புலர்ந்தது செந்தமிழ் வானில்!
செறிந்தனர் உலகெலாம் சேரபாண் டியனார்
எங்கணும் சோழனின் இனம்படை கொண்டது!
எந்தமிழ் வாழ்ந்ததென் றியம்படா குழலில்!
ஏர்ந்தனர் தமிழரென் றியம்படா குழலில்!

- என்று தனித்தமிழ் தலைவரும் தமிழ்மொழி, இன, நாட்டின் விடுதலைக்கெனவே தமிழ்க் களத்தில் தம்மை, தம் வாழ்வை விதைத்துக் கொண்ட விடுதலைப் போராளியுமான பாவலரேறு - ஐயா அவர் களின் கனவை நனவாக்கி, அந்த ஈடற்ற அறிஞனின் நினைவிடத்தில் "தமிழகம் மொழி யின நாட்டாலும், சாதி மறுப்புணர்வாலும் விடுதலை பெற்றது" என்ற வீர எழுச்சிவரியை பொறிப்போம்! ○

வெளிவரவுள்ளது!

திபி. 2029-க்கான

தென்மொழி நாள்காட்டி

அழகிய வண்ணப்படத்துடன் தமிழ் ஆண்டு நாள்காட்டி பாவலரேறு ஐயா அவர்களின் பாடல் வரிகளுடனும் முகாமையான குறிப்புகளுடனும் அணியமாகிக் கொண்டுள்ளது.

கூடுதல் படிகளின் தேவைக்கு முன்கூட்டி எழுதவும்.

விலை உருு. 15 மட்டுமே

- அமைச்சர், தென்மொழி.

செய்திகள்

தலைநகர்த் தமிழ்சங்கம்-
தமிழ்நல அமைப்புகள் ஆர்ப்பாட்டம் - சென்னை.

தமிழ்நாட்டரசுப் பணியாளர்களுக்கான தேர்வுகளைத் தமிழிலேயே நடத்தக் கோரித் தேர்வாணையத்தின் முன்பு, தி.பி. 2028 மடங்கல் 27 வெள்ளி (12.9.'97), அன்று காலை 10 மணிக்குத் தலைநகர்த் தமிழ்ச் சங்கத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்நல அமைப்புகளைச் சார்ந்தோர்தம் அறப்போர்ப் பேரணி, சென்னை - அண்ணாசாலைப் பெரியார் சிலை அருகிலிருந்து பேரா. சேது அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றுக் கோரிக்கைகளை முழங்கிக்கொண்டு செல்ல முற்பட்டபோது காவல் துறையினர் அவர்களை அவ்விடத்திலேயே தடுத்துத் தளைப்படுத்தினர். தளையுண்டோர் அனைவரும் திருவல்லிக்கேணிக் காவல் நிலையத்தில் சிறைவைக்கப்பட்டனர்.

காவல் நிலைய வளாகத்தில் திருக்குறள்மணி இறைக்குருவனார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அறப்போர் நிலைகள் குறித்துப் புலவர் சுந்தரராசன் விளக்கினார். தொடர்ந்து திருவாளர்கள் க.ப. சின்னராசு, ஓவியப் பாவலர் மு. வலவன், ப.ச. பன்னீர்ச்செல்வம், அபுதுல் கரீம், தமிழப்பன், பாவலர் மு. இராமச்சந்திரன், அ.சி. சின்னப்பா, திருவள்ளூர் பச்சையப்பன், பாவலர் இளமாறன், நா.வை. சொக்கலிங்கம், தணிகைமைந்தன், முரளி மார்க்கசு, குன்றத்தூர் வெற்றிச்செழியன், சிவ. காளிதாசன், புலவர் ப. சாத்தன், புலவர் முத்து எத்திராசன் ஆகியோர் பேசினர். தளை செய்யப்பட்டோர் அனைவரும் மாலை 6 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

பெரியார் வரலாறு திரைப்படமாகிறது.

தமிழ்நாட்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டிக் குமுகாயச் சீர்திருத்தத்துக்கு வலுவான அடித்தளம் அமைத்த பகுத்தறிவுத் தந்தை பெரியார், தனிப்பட்ட வாழ்க்கை - குடும்ப வாழ்க்கை என்றில்லாமல் பொதுநல வாழ்விலேயே தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு போராடிய பெருமைக்குரியவர். பல வகையில் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டான அவரது வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெரியாரோடு அணுக்கமாகப் பழகியதோடு அவருடைய பேரன்

பையும் பாராட்டையும் பெற்றவரும் கொள்கைப் பிடிப்பாளரும் தென்மொழி ஆர்வலருமான பாவலர் தஞ்சை வாணன், பெரியார் வாழ்க்கை நிகழ்ச்சியின் தொகுப்பு, திரைக்கதை யமைப்பு முதலான எழுத்துப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

பெருநடிகர் சிவாசிகணேசனுக்குச் 'சிவாசி' என்னும் சிறப்புப் பெயரைச் சூட்டிப் பெருமையுற விளங்கச் செய்த பெரியார்ப் பற்றிய இப்படத்தில் சிவாசி கணேசனே பெரியாராக நடிக்கிறார்.

திருவள்ளுவர் பெயர் நீக்கம்:

தென்மாவட்டங்களில் எழுந்த சாதிச் சிக்கல்களை யொட்டியே மாவட்டங்கள் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் பெயர்களில் இடம் பெற்றிருந்த தலைவர்களின் பெயர்களை அரசு நீக்கியது. ஆனால், திருவள்ளுவர் சாதி, மதங்களைக் கடந்த உலகப் பொதுமையர். ஆதலால் அவர் பெயரை மீண்டும் சூட்டுமாறு உத்தரவிடக் கோரித், 'தமிழ்நாடு திருவள்ளுவர் கழகத் தலைவரும் தென்மொழி அன்பருமான திரு வை.மு. குமார், சென்னை உயர்நெறி மன்றத்தில் தொடர்ந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. திருவள்ளுவர் சாதி மதங்களைக் கடந்தவராயினும் பெயர்சூட்டல் அரசின் கொள்கை முடிவு ஆதலால் அதில் அறமன்றம் தலையிட முடியாதென்றும், அரசு வேறு வகையில் திருவள்ளுவர்க்குப் புகழ்சேர்க்கும் என்றும் வழக்கை உசாவிய நடுவர் பதுமநாபன் தமது தீர்ப்பில் கூறியுள்ளார். ☆

பாவலரேறு அவர்களின் "ஐயை" - வில்லிசை நிகழ்ச்சி:

தி.பி. 2028 துலை 29 காரி (நவ. 15) இரவு, குழித்தலை அறிஞர் அண்ணா குமுகாயக் கூடத்தில் நடை பெறும் குழித்தலை, தமிழ்க் கா. சு. இலக்கியக் குழுவின் 33 ஆம் ஆண்டு விழாவில் நெல்லை அதியமான், திரவியத்தம்மாள் குழுவினர் வழங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் ஐயை வில்லிசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அன்பர்கள் வருகைதந்து பயன்கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர்.

நமக்கு வந்த மடல்கள்.

0 : 1634 பேரன்புடையீர், வணக்கம்.

தென்மொழி சுவடி 29, ஓலை 8-இல் த. நா. மா. இலெ. தோழர்களின் கருத்திற்கு (பாவலரேறு அவர்களின் பாராட்டு - வாழ்த்துப் பற்றியது) ஆசிரியர் சார்பில் தென்மொழியில் அளிக்கப்பட்டுள்ள விடை சரியானது.

---**பெ. மணியரசன்** பொதுச்செயலாளர், த. தே. பொ.க., தஞ்சாவூர்.

0 : 1635 அன்பு... வணக்கம்!

கடகத் திங்கள் தென்மொழி பார்த்தேன். 'புதுமைக் கனவுகள்!' என்னும் பாடல் கோவைச் சிறையில் 26.5.81 அன்று எழுதியதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 'தமிழ்மொழி வாழ்க!', 'ஒரே தீர்வு!', 'மொழி இனம் நாடு' ஆகிய பாடல்களும் அன்று பாடப்பட்டன.

'பாவலரேற்றின் உரைநடைத்திறன்' நல்ல பார்வை. தனித்தமிழ் நடையில் எளிமையினைக் கொண்டு வந்தவர் ஐயாதாம். பள்ளிக் குழந்தைகளும் படிக்கும்படி தமிழ்ச்சிட்டில் அவர் எழுதிய நடையே அழகுநடை. சிறுசொற்களால், சின்னசின்ன தொடரியங்களாக எழுதியுள்ளார்.

குறளியம் நாள்காட்டி முதன்முதலாக வெளியிடப்பட்டபோது தென்மொழியைப் பின்பற்றித்தான் மாத, கிழமைப் பெயர்களை எழுதிக் கொடுத்தேன். திரு. வேலா ஐயா அவர்கள் மகிழ்ந்து குறளியம் மொழியுணர்வில் எப்போதும் தென்மொழியைப் பின்பற்றும் என்று குறிப்பிட்டார்கள். --- **பாவை. நடவரசன்,** ஈரோடை.

0:1636 அன்பு... வணக்கம்!

...தென்மொழி, சுவடி 29, ஓலை 6-யில் வெளியான எனது பாட்டிலிருந்த 'கொலு' சொல்லையே அப்புறப்படுத்தி அழகு பார்த்தவர்கள் நீங்கள். அப்பாடல் புத்தக வடிவில் வரும்பொழுது 'கொலு' சொல் சூழல் அடிக்குறிப்புடன் வரும்.

"கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது"

--- **பாவலர் இளஞ்சித்திரன்,** வண்டலூர்.

[*ஆசிரியர் குறிப்பு:*

தென்மொழிக்கு வரும் எழுத்து உருப்படிகளில் பிறமொழிச் சொற்கள் இடம்பெற்றிருப்பின் அவற்றைக் களைந்து ஏற்ற தமிழ்ச் சொற் பெய்தும், இலக்கணப் பிழைகளிருப்பின் திருத்தியுஞ் செப்பஞ் செய்து வெளியிடுவதே அடிநாள்தொட்டு வழக்கம். பாவலர் இளஞ்சித்திரன் அவர்களின் பாடலின் 'கொலுவினிலே' என்னுஞ் சீரில், 'கொலு' என்பது அயன் மொழிச் சொல் என்பதனாலேயே, அச்சீர், சூழல் கருதியும் ஓசைநலங் கெடாமலும் 'வெற்றரங்கில்' என்று மாற்றித் திருத்தஞ் செய்யப்பெற்றது. **-இறை]**

0:1637 அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

கன்னி 4ஆம் பக்கல் 'தென்மொழி அவையம்' ஒருங்கிணைத்து நடத்திய கருத்தரங்கம் பற்றித் த. நா. மா. இலெ கட்சியைச் சேர்ந்த தோழர் காவேரிமகன் என்பவர் குறிப்பிடுகையில் கருத்தரங்கை நடத்தியது 'தென்மொழி அவையம் அன்று; த.ஒ.வி.இ. தான்' என்று கூறினார். நான் அதை மறுத்துக் கூறியபோதும், 'இல்லை இப்படி ஒரு கருத்தரங்கத்தைத் தென்மொழி நடத்தியிருக்க முடியாது' என்று கூறினார். நீங்கள் எப்படி இவ்வாறு கூறுகின்றீர்கள் என்று நான் கேட்டதற்கு, அவர் 'தென்மொழி அவையத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. இறைக்குருவனார் அவர்களின் கடந்த கால வரலாற்றைப் பார்க்கும்போது இது போன்ற கருத்துக்கான கருத்தரங்கை அவரால் நடத்தியிருக்க முடியாது' என்று கூறினார். எனவே இது குறித்துத் தெளிவுபடுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

--- **ச. செய்யாளன்**, திருவொற்றியூர்.

[*ஆசிரியர் குறிப்பு:*

தென்மொழி ஓர் இதழ்மட்டுமன்று; அஃது ஓர் இயக்கம் என்னுமாறு அது தொடங்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து வருகின்றது. அதற்கென்று வரையறுக்கப்பட்ட தெளிந்த கொள்கைகள் உண்டு. அவற்றை ஏட்டளவில் - எழுத்து வடிவில் மட்டுமன்றி இயக்கமாய் மக்களிடையே கொண்டுசென்று நடைமுறைப்படுத்த வழிவகுக்கும் அமைப்பே தென்மொழி அவையம்.

தென்மொழியின் சார்பில் கடந்த காலத்தில் தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாடுகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் - போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. பாவாணர் பொருட்கொடைத் திட்டம் முதலான திட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டுள்ளன.

சாதித் தீமைகளைக் களைவதற்கான செயற்பாட்டுத் திட்டம் தென்மொழியின் தொடக்கக் காலத்திலேயே ஆசிரியர் பாவலரேறு ஐயா அவர்களால் வகுக்கப்பட்டுள்ளது. ('சாதிக் கிறுக்கர்கள்' - தெ.மொ. சுவடி: 3; ஓலை: 8) பின்னரும் பலமுறை அதுபற்றிய விளக்கங்கள் தரப் பெற்றுள்ளன. தமிழீழச் சிக்கலில் தென்மொழியின் செயற்பாடுகள் வெளிப்படை

ஆகவே, இன்றைய சூழல் நோக்கித் தென் மாவட்டங்களில் சாதி வெறியாட்டம் குறித்தும், தமிழீழத்தில் மக்கட் படுகொலை குறித்தும் தென்மொழி அவையம் கருத்தரங்கம் நடத்துவது புதுமையன்று; தேவையற்றது மன்று. அவையத்தின் பொறுப்பில் யார் இருப்பினும் இதைச் செய்வது இயல்பானதும் இன்றியமையாததுமேயாகும்.

தமிழ்மொழி, இன, நாட்டுப்பணிகளில் முனைந்து ஈடுபட்டுப் போராடி வரும் த. நா. மா. இலெ. கட்சியில் பொறுப்பேற்றிருக்கும் திரு காவேரி மகன் போன்றவர்கள் தென்மொழி அவையத்தின் செயற்பாடுகள் குறித்தும், என் நிலை குறித்தும் மேலோட்டமாக அல்லாமல் முழுமையாக ஆய்ந்தறிந்து பேசுவதே நல்லது. -- ***இறை***]